1|12|1951 M.V.M M BANGALORE

போர்வாள்

வாள் 5 வீச்சு 13

1-12-51 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:

காஞ்சி. மணிமொழியார்

மா இளஞ்செழியன் B.A.Hons

துணை ஆசிரியர்:

காஞ்சி. கல்யாணசுந்தரம்

விலை 2 அணா

கழக மாளிகை—நமது பாசறை



சென்னை இராயபுரம் சூரியநாராயண செட்டித் தெரு 24-ம் எண்ணுள்ள இந்தச் சிறந்த மாளிகை, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமை நிலையத்திற்கென்று, 5—11—51ல், கழகத்தால், ரூ. 30,000 செலவில் வாங்கப்பட்டிருக்கிறது.

இதன் திறப்புவிழா 2—12—51 ஞாயிறு மாலை 5 மணிக்கு நடைபெறும்.

மஞ்சள் பெட்டியும் மாட்டுப் பெட்டியும்!

தேர்தல் காலத் திருவிளையாடல்

★

"பல்முறை சிறை சென்றேன். 20 வருடகாலமாக சேவை செய்து வந்தேன்."

"இன்று நான் விலகுகிறேன்"

"காங்கிரஸ், முதலாளித்துவத்தின் அரணாகிவிட்டது. சட்டசபைக்குப் பொறுக்கப்பட்ட அங்கத்தினர்களிலிருந்து இது தெளிவாகிறது ஆகவே நான் காங்கிரஸிலிருந்து விலகுகிறேன்."

தோழர் கன்னியப்பன் காங்கிரஸ் எம். எல். ஏ. இப்பொழுது விலகுகிறார் காங்கிரஸை விட்டு. அண்ணாவின் "வேலைக்காரி"யையும் "நல்ல தம்பி"யையும் கண்டு கடுங்கி, "வெளிவரலாமா இம்மாதிரி படங்கள்" என்று சட்டசபையிலே கேட்டவர் கன்னியப்பன்! அப்பொழுது அவர் காங்கிரஸில் இருந்தார். ஆகவே அது அவரது இயற்கையான பண்பு என இருந்தோம் நாம்.

அவர்தான் கூறுகிறார் இன்று காங்கிரஸ் முதலாளித்துவ மயமாகி விட்டதென்று! "கூறலாமா இப்படி? கம்யூனிஸ மல்லவா இது?" என்றெல்லாம் காமராஜர்கள் பேசுவார்கள் என்பது அவருக்குத் தெரியும். என்றாலும் கூறுகிறார் காங்கிரஸ், முதலாளிகளின் பாதுகாப்புக் கூடமென்று!

கன்னியப்பர்கள் "நல்லதம்பி"களாகிறார்கள். இது நாம் எதிர்பார்த்ததுதான். இன்று எத்தனையோ கன்னியப்பர்கள் விலகி விட்டார்கள்.

'அவர் ஒரு பெரிய காங்கிரஸ் கொறடா! இவர் யார் தெரியுமா? காந்தியின் உண்மையான சீடர். அதோ அவர் தியாகியாயிற்றே!" ஆம், கொறடாக்கள், காந்தி பக்தர்கள், தியாகிகள் இப்படி பலர் விலகிவிட்டனர் சுபகூடாரத்தைவிட்டு. "இப்படிப்பட்டவர்களா விலகினார்கள்?!" ஆச்சரியங்கலந்த குரலில் கேள்விகள் கிளம்பின! ஆனால் நாம் ஆச்சரியப்படவில்லை, ஏனென்றால் நாம் எதிர்பார்த்தது தான் இது.

கும்பல் கும்பலாக விலகுகிறார்கள். பிரிவுபசாரம் கொடுக்கும் தொகை நாளுக்கு நாள் அதிகமாகிக் கொண்டே வருகிறது. ஒரு கூட்டம்! அதிலே, சட்டசபைக்கு உறுப்பினர்கள் பொறுக்கப்பட்ட விதத்திலே அதிருப்தி என்ற கண்டனத் தீர்மானம்! ஆகவே விலகுகிறோம் என்ற முடிவுரை!!

நாள்தோறும் நடந்து வருகிறது இம்மாதிரி.

தென்னாட்டில் மட்டுமா இந்த நிகழ்ச்சி? மேற்கு வங்காள காங்கிரஸிலே பெரும் பிளவு; அறுபது காங்கிரஸ்காரர்கள் விலகிவிட்டனர். சாதாரணமானவர்களல்ல அவர்கள். காங்கிரஸின் தூண்கள்; பொறுப்புமிகுந்த வேலையிலிருந்தவர்கள். வட கல்கத்தா காங்கிரஸ் செயலாளர் திரு. சதிர் கோஷ்,

[அலிசேக் மன்சூர்]

மேற்கு வங்க காங்கிரஸ் குழுவிலுள்ள ஜே. பி. மெய்ட்ரா போன்ற பலர் விலகிவிட்டனர்.

'காங்கிரஸில் இனி நமக்கு வேலை இல்லை' என்ற தீர்மானம் நிறைவேற்றிவிட்டு, தீர்மானத்தோடு விலகிவிட்டனர்.

"வகுப்புவாதக் கொள்கையுடையவர்கள், பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆதரவாளர்கள், கள்ள மார்க்கட்காரர்களின் கைக் கூலிகள் ஆகியோர்தான் வரக்கூடிய தேர்தலுக்கு காங்கிரஸ் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்!"

நாம் கூறவில்லை. மேற்கு வங்காளக் காங்கிரஸ் தோழர்களின் இறுதிச் செய்தி இது. ஆகவே காங்கிரஸை விட்டு விலகுகிறோம் என்றார்கள் அவர்கள்.

தேர்தல் என்றவுடன் அபேட்சா பத்திரத்தை "க்யூ" வரிசையில் நின்று தாக்கல் செய்கிறார்கள் காங்கிரஸ் மகான்கள்! சட்டசபை உறுப்பினர் பதவியை மூலதனமில்லாத ஒரு வியாபாரமாகக் கருதுகிறார்கள் அவர்கள்.

லக்னோவிலே ரபி அஹமத் கித்வாயின் வீட்டுக்கு முன் ஒரே கூட்டமாம். எல்லாம் கதர் மயம். தேர்தலிலே எப்படியாவது காங்கிரஸ் டிக்கட்டைப் பெற்று விடவேண்டுமென்று. கதர்ச்சட்டைக்காரர்கள் போய்க்கொண்டும் வந்துகொண்டுமிருந்தார்களாம். சுருங்கச்சொல்ல வேண்டுமானால் கித்வாயின் வீடு காங்கிரஸ்காரர்களின் புண்யஸ்தலமாகிவிட்டது. அவ்வளவு கூட்டம்! பல சிறிய வியாபாரிகள் கித்வாயின் வீட்டுக்கு முன், குளிர்பானங்கள், சிகரட் முதலியனவைத்து வியாபாரம் செய்ய ஆரம்பித்து விட்டார்களாம். நல்ல வியாபாரமாம்!

மேலே கூறப்பட்ட செய்தி கற்பனைச் சித்திரமல்ல. "திராவிட நாட்"டில் வெளிவந்த செய்தியுமல்ல. உண்மையாக நடந்த சம்பவம்.

வியாபாரிகளுக்கு நல்ல வரும்படி வரக்கூடிய அளவுக்கு, அங்கு கூட்டம்! காரணம் தேர்தல் வியாபாரம்! புது டில்லியிலே 'டைப் மெஷினை'ச் சுற்றி தேர்தல் புலிகள்!

ஆனால் பண்டித நேருவோ நேர்மையான மனிதர்களைத்தான் காங்கிரஸ் சார்பாக நிறுத்தவேண்டும் என்று கூறினார். இப்பொழுதும் கூறி வருகிறார். பண்டித நேருவின் பாணியில் கூறவேண்டுமானால் "Men of Integrity" அதாவது உண்மையானவர்களை, நேர்மை நெஞ்சம் படைத்தவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமாம்!

பண்டித நேரு கூறும் "Men of Integrity" இன்று காங்கிரஸில் இருக்கிறார்களா? எப்படி இருக்க முடியும்? சுயநலம், லஞ்சம், முதலாளித்துவம், பாஸிஸம் இவை

களின் கூட்டுத் தொகுப்பாகிவிட்டது இன்றைய காங்கிரஸ்.

"மகாத்மா காந்தி உயிரோடு இன்றைய தினம் இருப்பாரேயானால், அவர் சிறையில்தான் இருப்பார்."

அண்ணா கூறவில்லை இப்படி; காங்கிரஸிலிருந்து சேவை செய்து, காங்கிரஸ் தலைமைப் பீடத்திலும் அமர்ந்துவிட்டு வெளியேற வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளான கிருபலானி சிந்தும் வார்த்தைகள் இவை. அவர் சிந்திய சொற்கள் இன்றைய காங்கிரஸின் படப்பிடிப்பு; இன்றைய காங்கிரஸின் வரலாறே அதில் அடங்கியிருக்கிறது.

"நேர்மையற்ற தன்மை" காங்கிரஸின் தேசிய கடமையாகிவிட்டது!" அவர் தான் கூறுகிறார்! நெல்லையில் பேசும் பொழுது! தேசிய கடமை (National duty) என்கிறார்.

தேர்தல் நெருங்க நெருங்க, 'இந்த நேர்மைக்கும், காங்கிரஸுக்கும் தொடர்பே கிடையாது போலும்' என்று மக்கள் நினைக்கும்படியான நிலை இன்று நாட்டிலே ஏற்பட்டுக் கொண்டு வருகிறது.

'தேர்தலிலே கண்ணியம் அனுசரிக்கப்படவேண்டும். மக்கள் அனைவர்களும் ஒழுங்கு முறைகளைக் கையாள வேண்டும்.' என்றெல்லாம் வடக்கே பண்டிதர் நேரு பேசுகிறார்; தெற்கே குமாரசாமி ராஜா பேசுகிறார். ஆனால் அப்படி நடைபெறுமா? மக்கள் சந்தேகிக்கிறார்கள். அதற்கான அறிகுறிகள் நாட்டிலே பரந்து காணப்படுகின்றன.

மணமகன் சிறையிலே! திருமணம் வெளியே! எப்படி இருக்கும்? நடக்கப்போகும் தேர்தல் அப்படித் தானிருக்கும் என்று எண்ணுகிறோம் நாம். எண்ண இடமிருக்கிறது. அரசியல் குற்றச்சாட்டுக்கு இலக்கான ஆயிரக்கணக்கான மக்கள் சிறையிலே வாடுகின்றனர். உறுப்பினர் போட்டியில் கலந்து கொள்ளும் எதிர்க்கட்சி தோழர்கள் சிலர் சிறையிலே! பலர் மறைமுகமான வாழ்வுக்கு (Under ground) ஆளாக்கப்பட்டிருக்கின்றனர். விடுதலை செய்யவோ, அல்லது வாரண்டை ரத்து செய்யவோ 'ராமராஜ்யம்' மறுக்கிறது. தேர்தல், தேர்தலாகவே இருக்கும் என்று எப்படி நாம் எதிர்பார்க்க முடியும்? நரம்புகளில்லாத வீணையிலிருந்து நாதத்தையும், சாக்கடைக் கிடங்கிலிருந்து சந்தன மணத்தையும் எதிர்பார்ப்பதுபோலத்தான், காங்கிரஸ் வட்டாரத்திலிருந்து நேர்மையை எதிர்பார்ப்பதும்.

தேர்தல் மோசடி ஒரு தினசரி வேலையாகிவிட்டது இன்று! நாஞ்சில் நாட்டு கோட்டயம் தொகுதிக்காக அனுப்பப்பட்ட டாக்டர் ஜான் மத்தாயின் தேர்தல் மனு நிராகரிக்கப்பட்டுவிட்டது. அதே தொகுதியில் ஐக்கிய முன்னணியின் சார்பில் நின்ற வர்க்கி (Varkey) என்பவர் ஆகஸ்ட் மாதத்தில், கேடு நிறைந்த அரசியல் சொற்பொழிவு நிகழ்த்தினார் என்று குற்றஞ் சாற்றப்பட்டு சிறையிலே தள்ளப்பட்டிருக்கிறார்.

நாஞ்சில் நாட்டிலே இதேபோல் மற்றொரு சம்பவமும் நடந்திருக்கிறது. கே. ஆர். கௌரி என்னும் அம்மையார் ஒரு வக்கீல். வர்த்தக சங்கத்தின் தலைவி. திருவூர் தொகுதியில் தான் நிற்கப்போவதாகப் பதிவு செய்துவிட்டு, அதிகாரியின் காரியாலயத்தைவிட்டு வெளி வந்ததும் கைது செய்யப்பட்டிருக்கிறார், ஜாமீனில் விடவும் அரசாங்கம் மறுக்கிறது.

ஒரு சுயேச்சை அபேட்சகர், தமக்கு தேர்தல் அதிகாரி தருந்த தேர்தல் சின்னத்தை ஒதுக்கச் செய்வதற்காக தமக்குப் பிடித்தமான மூன்று சின்னங்களைத் தெரிவிக்கவேண்டும். பஞ்சாப் மாகாண சட்டசபைக்கு, ரூபார் தொகுதியில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட ஸ்தானத்துக்கு அபேட்சா பத்திரத்தைத் தாக்கல் செய்த பஞ்சாப் மாஜி மந்திரி பிரித்விசிங் ஆசாத் இரண்டு சின்னங்களை மட்டுந்தான் தெரிவித்தார் என்ற அற்ப காரணத்துக்காக அவரது அபேட்சா பத்திரம் நிராகரிக்கப்பட்டது. காங்கிரஸ் அபேட்சகரை எதிர்த்து சுயேச்சையாக நின்றார் இவர். காங்கிரஸை பகிஷ்கரித்த பர்க்காவா கோஷ்டியைச் சார்ந்தவர் இவர். இவருக்கு இந்த கதி.

தூத்துக்குடியில் பஞ்ச மந்திரி ரோச் விக்டோரியாவை எதிர்த்து நிற்கும் பொது வுடமைத் தோழர் பால தண்டாயுதத்தின் மீதுள்ள வாரண்ட் இன்னும் ரத்து செய்யப் படவில்லை.

மைசூர் கோலார் தங்க வயலைச் சுற்றி கூட்டங்கள், ஊர்வலங்கள், கோஷங்கள் முதலியன மூன்று மாதங்களுக்குக் கூடாதென, 39, 45 செக்ஷன் பிரிவின் கீழுள்ள சட்டம் கூறுகிறது.

ஒரிஸ்ஸாவிலே புயல் வீசத் தொடங்கிவிட்டது. மந்திரி மெஹ்தாபை எதிர்த்து நிற்கும் அபேட்சகர்கள் சிறையிலே கிடக்கிறார்கள் இன்று.

பம்பாய் அசெம்பிளிக்குப் போட்டியிடும் மாகாண ஐக்கிய கிஸான் சபையின் உபதலைவர் O. M. ரங்கர்கர் இன்று பரோடா சிறையில் அகப்பட்டுத் தவிக்கிறார். இந்த நிலையிலே அவர் தேர்தல் பிரச்சாரம் செய்ய முடியுமா? ஆகவே தன்னை விடுதலை செய்ய வேண்டுமென்று அவர் உண்ணா விரதமிருக்கிறாராம்.

மேற்கு வங்காளத்தில் ஒரு காங்கிரஸ் அபேட்சகர் தேர்தல் பிரச்சாரத்துக்காக தன்னுடைய ஜீப் காரில் போலீஸ் இன்ஸ்பெக்டரையும் அழைத்துச் சென்றிருக்கிறார். போலீஸ் இன்ஸ்பெக்டர், சம்பந்தப்பட்ட காங்கிரஸ் தோழருக்கு வாக்குரிமைகளை அளிக்குமாறு மக்களை வேண்டியுமிருக்கிறார்.

தேர்தலில் ஒழுங்கு முறைகள் அனுஷ்டிக்கப்படும். நேரு கூறுகிறார். நம்பமுடியுமா? காங்கிரஸ் இன்று நடுங்க ஆரம்பித்துவிட்டது.

எதிர்க்கட்சி அபேட்சகர்களை நசுக்கவேண்டுமென்பதற்காக எல்லாவித முறைகளையும் காங்கிரஸ் கையாளத் தொடங்கிவிட்டது. பண்டிதர் கூறும் Men of Integrity யை காண முடியவில்லையே நம்மால்.

கூண்டிலடைபட்ட சிங்கங்களைப் பார்த்து சுண்டெலிகள் "சண்டைக்கு வருகிறாயா" என்று கேட்டனவாம். கம்பிகளுக்கும், கண்ணீருக்குமிடையேயுள்ள அல்லல் படுகுழியில் மக்களைத் தள்ளிவிட்டு, 'தேர்தலில் எங்களை வெல்லுங்கள் பார்ப்போம்' என்று ஆணவப் பிரகடனம் செய்கிறது காங்கிரஸ். கால்கள் துண்டிக்கப்பட்டவனைப் பார்த்து ஓட்டப் பந்தயத்துக்கு வருகிறாயா என்று கேட்கிறது கதர்க்கூட்டம்.

"காங்கிரஸுக்கு ஓட்டுப் போடுவது சீரான முன்னேற்றத்துக்கு

(10-ம் பக்கம் பார்க்க)

இரவு நேரந்தனிலே......!

[ச. முருகையன்]

இரவு, கதிரவனின் வெப்பத்தில் வாடிய மக்களுக்கு, வெம்மையைப் போக்கி, தண்மையை உண்டு பண்ணும் சந்திரன் வானத்தில் தவழும் நேரம். பகல் பூரா உழைத்த மக்கள் தங்கள் களைப்புத் தீர உறங்கும் நேரம். அலுவலகங்களில் வேலை பார்க்கும் சர்க்கார் உத்தியோகஸ்தருக்கு ஓய்வைத் தரும் நேரம். மனம் சரியாக இல்லாமல் கவலையைத் தரக்கூடிய நிகழ்ச்சிகள் ஏற்பட்டு, அவற்றால் பாதிக்கப்பட்ட மக்கள், அந்த மனக்கவலையை அகற்றுவதற்கு, சினிமா நாடகம் பார்க்கச் செல்லும் நேரம். உல்லாச புருஷர்கள் பகல் பூரா தூங்கிவிட்டு, பொழுதுபோகவில்லையேயென்பதற்காக, சினிமா, பாட்டுக் கச்சேரி, கிளப் இவற்றிற்குச் சென்று, தங்கள் பொழுதைக் கழிக்கும் அரிய நேரம். மதுவைக் கிண்ணத்தில் ஊற்றி மங்கை தர, மங்கையை ஒரு கரத்தால் அணைத்தவாறு, மதுவைப் பருகி, அவளோடு கொஞ்சிக் குலாவிப் பஞ்சணையிலே பரவசமடையும் சரச சல்லாப புருஷர்களுக்கு உகந்த நேரம். தேர்வுக்காக, பள்ளி மாணவர்களும் கல்லூரி மாணவர்களும் தங்கள் பாடங்களைக் கண் விழித்துப் படிக்கும் நேரம். பகல் பூரா உறங்கி விட்டு தங்கள் பிழைப்பைக் கருதி, கள்வர்கள் செல்வந்தர் வீட்டில் கன்னக்கோல் வைத்துத் திருடும் நேரம்: ஷோக் மைனர்கள் யாராவது சாலைகளில் செல்லுகிறார்களா எனபதைக் கவனித்து, அவர்களைப் பின் தொடர்ந்து, "நல்ல கிராக்கி இருக்கிறது சார்; சரக்கு உயர்ந்த ரகம், சார்" என்று அளந்து, அவர்களிடத்திலிருந்து கமிஷன் பெற்றுக்கொண்டு, சிங்காரிகளிடத்தில் அவர்களை ஒப்படைக்கும் உலுத்தர்களுக்கு உற்சாக மூட்டும் விலை மதிப்பில்லாத உன்னத நேரம்.

இரவோடு இரவாக, எந்த இடத்திற்குச் சரக்குகள் அனுப்பலாம் என்று திட்டமிட்டு, அந்தச் சரக்குகளை லாரியில் ஏற்றி, அதைக் கண்டுபிடிக்கும் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து கள்ள மார்க்கெட்டில் கொள்ளை லாப மடிக்கும் உன்மத்தர்களின் ஒப்பு உயர்வற்ற உயரிய நேரம். பாமர மக்களுக்கு இராம பிரானின் திவ்விய சரித்திரத்தையும், கோபாலகிருஷ்ணன் கோபிகா ஸ்திரீகளுடன் கூடிவிளையாடிய வரலாற்றையும் ஆஸ்திக சிரோன்மணிகளுக்குப் பிராம்ணோத்தமர்கள் கதா காலட்சேபம் நடத்திடும் நல்ல நேரம்.

மக்களின் அறியாமையைப் போக்கி, அவர்களுக்கு அறிவு விளக்கம் தந்து, அவர்கள் நல்ல முறையில் வாழும் வகைகளை எடுத்துக் கூறி, பிரச்சாரம் செய்ய உகந்த நேரம். எழுத்தாளனின் சிந்தனை புரண்டோடும் நேரம்.

அந்த இரவு நேரந்தனிலே, எழுத்தாளன் கற்பனையிலே மிதப்பான், நாடகாசிரியன் ஒரு சிறந்த நாடகத்தைச் சமைப்பான். கவிஞன் மக்களுக்கு நல்வழியைக் காட்டக்கூடிய கவிதைகளை இயற்றுவான்; காதலர் தங்கள் உள்ளக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளுவர். காதலனைப் பிரிந்த காதலி, பிரிவுத் துன்பத்தால், நிலவின் வெப்பம் தாங்காது மனமுருகுவாள்.

வானத்தில் சந்திரன் மேகத்தினூடே தாரகைக் குழாத்தோடு, மெள்ளப் பவனி வந்துகொண்டிருந்தான். 'சல சல' வென ஓடும் அழகிய ஆறு. அந்த ஆற்றின் எதிர்ப் புறத்தே அமைந்துள்ள எழிற் பூங்கா. பூங்காவை அடுத்த ஒரு அல்லித் தடாகம். சந்திரனைக் கண்டு மலர்ந்த குமுத மலர்கள்! தடாகத்தின் படிகளண்டை அமர்ந்துள்ள இளங்காதலர்கள்! தென்றல் தவழும் வேளை! காதலன் மடியில் சயனித்திருக்க, காதலி ஒரு கையால் சிகை அளாவிய வண்ணம் இருக்க; உள்ளம் ஒன்றுபட்ட நிலையிலே, அவர்கள் மனமகிழ்ச்சியுடன் இன்ப புரியை நோக்கிப் பயணம் போய்க் கொண்டிருந்தனர்.

மாளிகையிலே, சரசாங்கி ஒருத்தியுடன் சீமான் ஒருவர் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருக்கிறார். அவள் வேசி; பணத்திற்குத் தன் உடலை 'விற்கும் பாத்தை' அவள் அழகு நடனம் ஆடுகிறாள்; தன் அங்கம் குலுங்க ஆடுகிறாள். மெல்லிய ஆடை அணிந்து, சீமானுக்குத் தன் மேனியழகை பருவத்தின் பூரிப்பைக் காட்டுகிறாள். அந்த அழகிய சீமான் தன்னையே மறந்து, சொக்கி நிற்கிறார். அவளுக்கு வேண்டியது அவர் பணம். அவருக்கு வேண்டியது அவள் உடல். அவள் பணத்திற்கு அடிமை. அவர் காமத்துக்கு அடிமை. அவர் காமப் பசியை அவள்தான் தணிக்கமுடியும். அவர்கள் உள்ளத்தில் அன்பு என்பது கிஞ்சித்தேனும் உண்டா? அதை எதிர் பார்க்கத்தான் முடியுமா?

ஓர் ஆலைத் தொழிலாளி; நாள் பூராவும் உழைத்து உழைத்து, களைப்புத் தீர தன் குடிசையிலே படுத்துப் புரளுகிறான். அவன் மனைவி அவனருகே! இரும்பைக் காந்தம் இழுப்பதுபோல அவனுக்கு அவள் அருகில் படுத்ததும், ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. ஐந்து நிமிஷங்கள் அவன் அந்தநிலையிலே! நகர்ந்து படுத்துவிட்டான் பிறகு. அவனுக்கும் அவளுக்கும் உள்ள இடைவெளி அதிகமில்லை அவ்வளவுதான், அவன் அவளோடு......! உற்சாகமில்லை அவன் இதயத்தில், ஏதோ கடனுக்கு, ஆசைக்கு! அவ்வளவு தான்.

அந்த இரவு நேரந்தனிலே, மஞ்சத்திலே, கிழவன் வாயில் எச்சில் வழிய, குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருக்கிறான். அவனருகே, அவனை மணந்த குமரி, ஏக்கத்தோடு, மன வேதனையோடு, காணப்படுகிறாள். அவளை அவன் சீண்டை பண்ணவில்லை. அவள் சமைத்துப்போட வேண்டியது, தன் பிள்ளைகளைக் குளிப்பாட்டி, சாதம் போட்டு, பள்ளிகளுக்கு அனுப்பவேண்டியது, வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டியது, இவைதான் அவன் அவளிடத்திலிருந்து எதிர் பார்ப்பது! அவள் விரகதாபத்தால் வாடி, வேதனைக் கண்ணீர் வடிக்கிறாள். ஜன்னல்

வழியே பார்க்கிறாள். வெண்மதி வானத்தில் மிதந்துகொண்டிருக்கும் காட்சி, அவளைச் சுட்டெரிக்கிறது. அவளுக்கு விவாகமாகி, ஒரு முறையேனும் அவள் இன்பம் துய்க்கவில்லை. படுக்கையைவிட்டு எழுந்தாள்; கீழே இறங்கினாள். கார் ஷெட்டில் படுத்திருக்கும் டிரைவரிடம் வந்தாள். "வீரா! வீரா!" என்று மெதுவாகக் கூப்பிட்டாள். வீரன் திடுக்கிட்டு எழுந்து, கண்களைக் கசக்கிவிட்டுப் பார்த்தான். "என்ன அம்மா?" ஆச்சரியத்துடன் அவன் பார்த்தான். "ஆம், வீரா, பேசாதிரு!" என்று கூறி, அவனருகே படுத்துக்கொண்டாள். அதிலே அவளுக்கு வேண்டிய இன்பம் கிடைத்தது. அவள் தாகம் தணிந்தது.

மாலை நேரந்தனிலே தான் பார்த்த இயற்கைக் காட்சிகளை, இந்த இரவு நேரந்தனிலே, எழில் மிகுந்த சித்திரமாகத் தீட்டிக் கொண்டிருக்கிறான், ஓவியன்! மணி பன்னிரண்டு, ஒன்று ஆகியும், இன்னும் தன் நாயகன் படுக்கவில்லையே, இவ்விதம் கண் விழித்துக்கொண்டு சித்திரம் தீட்டினால், உடல் நலம் கெடுமே, எனக் கருதியவளாய், அவன் ஆசை மனைவி அவனருகே வந்து, "படுத்துக்கொள்ளுங்கள், இவ்விதம் கண் விழித்தால் உடம்பு என்னுவது, காலையில் பார்த்துக்கொள்ளலாம்!" எனக் கொஞ்சு மொழி பகரும் தன் ஆசை நாயகியைப் பார்த்தான். அவள், பருவத்தில் குலுங்கிப் பூத்த மலர்! அவன் கண்ணுக்கு இளமை விருந்து அளிக்கும் எழிற்பாவை! உண்ண உண்ணத் தெவிட்டாத தொவ்வைக் கனி! காதளவு நீண்ட கயற்கண்ணாள்! தன் நாயகனிடம் அளவற்ற பாசமிகுந்தவள்! அவன் நலனே தன்னலன் எனக் கருதும் கற்புடைய மங்கை! அவள் அன்புப் பார்வைக்கு, அவன் கீழ்ப்படிந்தவனாய், அவளோடு சயனித்துவிட்டான்.

போர் முகாமிலே, பகல் நேரத்தில் ஓய்ச்சல் ஒழிவு இல்லாமல் போரிட்டு, இரவு நேரந்தனிலே, தனக்குக் கிடைத்த ஓய்வு நேரத்திலே, தொலை தூரத்திலுள்ள தன் இள மனைவிக்குக் கடிதம் எழுதுகிறான், போர்வீரன். அக்கடிதத்தில், தன் உள்ளக் கிளர்ச்சிகளை, தன் உணர்ச்சிகளை, அவளில்லாமல் தான்படும் இன்ப வேதனைகளை, போர் புரிகையில் அவளுடைய அன்பு முகத்தை அகக் கண்ணால் பார்த்தவனாய்த் தான் வீரத்தோடு போரிடும் தன்மைகளை விளக்கி எழுதுகிறான் தன் மனைவிக்கு! பல கலைகளைக் கற்பதற்காகத் தங்கள் ஒரே புதல்வனை, செல்வமாக வளர்த்த தங்கள் அருமை மைந்தனை, தொலை தூரத்துக்கு அனுப்பி, அவன் பிரிவால் வருந்தி, மழலை மொழி பேசிடும் அவன் பேச்சுக்களையும் பாலூட்டி சீராட்டி அவனை வளர்த்த நாட்களையும், நினைவிலிருத்திக் கொண்டு, தங்கள் ஆருயிர் மகனை இந்த நேரத்திலே பிரிந்து இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதே என அவன் தாய் தந்தையர் சோகக் கண்ணீர் வடிக்கின்றனர்.

கொந்தளிக்கும் கடல், சுழன்று வீசும் சூறாவளிக் காற்று. இடியும் மின்னலும் கலந்த 'சோ' வெனப் பெய்யும் மழை. இவைகளைப் பற்றிக் கவலையுறாமல், தங்கள் குடும்பங்கள் உய்ய, தங்கள் உயிரைத் திரணமாக மதித்து, மரக்கலமேறி, அந்த மையிருட்டிலே, அந்த ஆழ் கடலிலே, வலைஞர்கள் மீன் பிடிக்கச் செல்லும் காட்சி பரிதாபத்துக் குரியதுதான்!

முற்றும் துறந்தவர். மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை இம்மூன்று ஆசைகளைத் தவிர்த்தவர் மும்மலங்களையும் அகற்றியவர். 'பரமனின் திருவடிகளே சரணம்' என நிஷ்டையிலமர்ந்திருப்பவர். மதத்துக்கு அடியவர்! மக்களுக்கு நல்லுபதேசம் செய்திடும் குரு! முக்காலமறியும் ஞானி! பகலிலே, சிஷ்ய கோடிகளுக்கும் மக்களுக்கும் உபதேசம் செய்பவர்! இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி, இவைகளைப் பற்றித் தத்துவார்த்தம் செய்பவர் அவர் இந்த இரவு நேரங்களிலே, சுந்தரியிடத்தில் தன் மனதைப் பறிகொடுத்து, சுந்தராங்கியோடு லீலா விநோதங்களைச் செய்து கொண்டிருக்கிறார். இதைக்கேட்பவர் யாருளர் அந்த ஆசிரமத்திலே, அந்த மடத்திலே! மடங்கள் மக்களுக்கு நல்லொழுக்கத்தைப் பற்றி உபதேசிப்பதற்கென்று ஏற்பட்டவை என்ற நினைவு இல்லாமல், விபச்சாரவிடுதியாக்கும் உலுத்தர்கள், கயவர்கள், நாட்டு மக்களுக்குப் பெருந் தீங்கு இழைக்கும் துரோகிகள், ஒரு சிறு கூட்டத்தாரால், ஞானிகள் குருக்கள் முற்றும் துறந்தவர், அடியவர்கள் எனப்போற்றப்படும் நிலை என்னவென்றுரைப்பது!

'உலகம் பலவிதம்!' என்றபடி, வித்தியாசமான கருத்துக்களை இலட்சியமாகக் கொண்ட மக்கள், இழிந்த பண்புகளை உடைய மக்கள், நடந்து கொள்ளும் விதமே வெவ்வேறு வகையானதுதான்!.

இந்த இரவு நேரத்தைத் தனக்கு நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு, அதன் மூலம் மற்றவர்கள் உய்ய, தன்னுடைய நல்ல கருத்துக்களை, அஞ்சாமல், வீரத்துடன் எடுத்து உரைப்பவனே அறிஞன்! விருப்பு வெறுப்பின்றி சுய நல மனப்பான்மையில்லாமல், நாட்டுக்குத் தொண்டு செய்பவனே சிறந்தவாதி! மற்றவர் நலனுக்காக, மற்றவர்கள் நல்ல முறையில் வாழ்வதற்காக, அவர்கள் வாழ்க்கை பூத்துக் குலுங்கி, செழிப்புடன் ஓங்குவதற்காகத் தன்னை அர்ப்பணிப்பவனே தியாகி!

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

பிளந்து கொண்டு செந்தமிழ்முறை செங்காவு கக்கிய காட்சி—அந்தச் சொற்கள்—இவை அனைத்தும் அவன் கண்முன் இலேசாகத் தோன்றின! காதுகளில் ஒலித்தன! அவன் உடல் சிலிர்த்தது. உள்ளம் உணர்ச்சியினால் உந்தித் தள்ளப்பட்டது. அவன் கண்களிலே கண்ணீர் கசிந்தது! ஆனந்தமும் துயரமும் கலந்த கண்ணீர் அது! அதனைக் கக்கிய கண்கள் சிவப்பு மெருகேற்றிக் கொண்டு சினத்தை வெளிப்படுத்தின. அவனையறியாமல் அவன் வலதுகை, அவன் இடையில் செருகப்பட்டிருந்த வாளை அதன் உறையினின்றும் உருவிற்று.

"பூசுரப் புல்லர்கள்!"—அவன் வாய் உக்கிரமாக முணுமுணுத்தது.

(தொடரும்)

"போர்வாள்"

சந்தா விவரம்

ஓராண்டு	ரூ.	6 8 0
6 மாதம்	ரூ.	3 4 0

போர்வாள் அலுவலகம்

பவழக்காரத் தெரு,

சென்னை 1.

சிறு நாடகம்

மும்மூர்த்திகளின் முன்னேற்றம்

[திருமுடிக்காரி]

(கைலாயத்தில் பரமசிவன் பார்வதி சமேதராய் வீற்றிருக்கிறார். அவர்கள் பக்கத்தில் அவர்களது அருமை மக்கள்! ஒரு காவலாளி ஓடி வருகிறான்.)

காவலாளி: வணக்கம் தேவா! தங்கள் சமூகம் நோக்கி மகாவிஷ்ணு வந்துகொண்டிருக்கிறார்.

பரமசிவன்: அப்படியா? ஓடு. உடனே அழைத்து வா அவரை. (மகாவிஷ்ணு வருகிறார்)

மகாவிஷ்ணு: வணக்கம் தோழரே!

பரமசிவன்: வணக்கம் தோழரே! உம் வரவு நல்வரவாகுக! இந்த ஆசனத்தில் அமரும்.

மகாவிஷ்ணு: நான் அழைக்கப்பட்டதின் காரணம்? ஏதாகிலும் அவசரமா?...

பரமசிவன்: இல்லை ஆலோசிக்க வேண்டியது ஒன்று! அதற்காக அழைத்தோம் உம்மையும் உம் மகன் பிரமனையும். (இதற்குள் பிரமனும் வந்துவிடுகிறார்).

பிரமதேவன்: வணக்கம் பரமசிவரே! அடேடே என் தந்தையும் வந்திருக்கிறாரே! ஏதாவது முக்கியமான பிரச்சினையா?

பரமசிவன்: ஆம்—முக்கியமான பிரச்சினைதான். இந்த மும்மூர்த்திகளின முன்னேற்றத்தைப்பற்றிப் பேசவேண்டும். (பரமசிவன் பேசுகிறார்).

தோழர்களே! நான் உங்கள் இருவரையும் அழைத்ததற்குக் காரணம் இருக்கிறது நிறைய. இப்போது இருக்கும் காலமோ கலியுகம். பூலோகத்திலே சொல்லுகிறார்கள் மின்சார சகாப்தம் (Electrical age) என்று. பூலோகத்திலே வசிட்டபவர்கள் விஞ்ஞானத்தின் துணைக்கொண்டு சாதிக்க முடியாததை எல்லாம் சாதிக்கிறார்கள். தார் ரோட்டிலே மெருகு குலையாத காரிலே காற்று வேகமாகப் பறந்து செல்லுகிறார்கள். வானை முட்டும் அளவிற்கு விமானத்திலே பறந்து செல்லுகிறார்கள். இப்படி இருக்கிறது அங்கு. ஆனால் நாம் செல்லுகிறோம் மாட்டு வாகனத்திலே...கருட வாகனத்திலே...நாய் வாகனத்திலே. இது வெட்கப்பட வேண்டிய விஷயம்! வேதனைப் படவேண்டிய விஷயம்கூட!

பூலோகத்திலே நாய் உபயோகப்படுகிறது என்றால் வீட்டைக் காக்கவும் வேட்டையாடவும் தான். மாடு உபயோகப்படுகிறது என்றால் ஏர் ஓட்டவும் வண்டி இழுக்கவும்தான்

பிரமதேவன்: பூலோகத்தில் துருவப் பிரதேசம் என்ற நாட்டில், நாய், வாகனமாக உபயோகப்படுகிறதே. இதைக் கண்டு பூலோக வாசிகள் சிரிக்க மாட்டார்களா?

பரமசிவன்: அது நாட்டின் சூழ்நிலையைப் பொறுத்திருக்கிறது. அது பனிப்பிரதேசம். அங்கு மாடுகள் இல்லை. நல்ல ரோடுகள் இல்லை. நாய்கள் ஏராளமாக இருக்கின்றன. ஆகவே அதை வாகனங்களாக உபயோகப் படுத்துகிறார்கள். தவறென்ன இதிலே!

மகாவிஷ்ணு: அப்படியானால் நாம் என்ன செய்யவேண்டும் என்று சொல்லுகிறீர்.

பரமசிவன்: பூலோகத்தில் உள்ள விஞ்ஞான நாடுகளுக்கு நாம் செல்லவேண்டும். அந்த நாட்டின் அமைச்சரையோ அல்லது அரசரையோ கண்டு பேச வேண்டும். நாமும் விஞ்ஞானம் கற்றுக்கொள்ள வேண்டும். பிறகு புதுப்புது விமானத்திலே நாம் நம் நாட்டிற்கு வரவேண்டும்.

பிரமதேவன்: சரியான யோசனை தோழரே!

பரமசிவன்: சரி, பிரமதேவரே! நீர் ரஷியாவிற்குச் செல்ல வேண்டும். நண்பரே, விஷ்ணு, நீர் இங்கிலாந்திற்குச் செல்வீராக, நான் அமெரிக்காவிற்குச் சென்றுவருகிறேன். மீண்டும் சந்திப்போம். வணக்கம். சென்றுவருவோமா! (மூவரும் செல்கின்றனர்).

* * *

[அமெரிக்காவில் ட்ருமன் தன் மாளிகையில் அமர்ந்திருக்கிறார். ஒரு காவலாளி வருகிறான்]

காவலாளி: யாரோ புது மனிதர்போல் இருக்கிறது. தங்களைக் காணவேண்டுமாம்.

ட்ருமன்: புது மனிதரா? எந்த ஊர் என்று கேட்டாயா?

காவலாளி: கேட்டேன். கைலாயம் என்கிறார்.

ட்ருமன்: அப்படியானால் அழைத்துவா.

(பரமசிவன் உள்ளே வருகிறார்)

பரமசிவன்: குட் மார்னிங்!

ட்ருமன்: குட்மார்னிங்! தாங்கள் எந்த ஊர்?

பரமசிவன்: கைலாயம்.

ட்ருமன்: கைலாயமா? கேள்விப்பட்டதே இல்லையே! உங்கள் பெயர்?

பரமசிவன்: பரமசிவன்.

ட்ருமன்: உங்கள் தந்தையின் பெயர்? என்னய்யா! யோசிக்கிறீர். அப்பா பெயர் தெரியாதவரா? சரி, சரி இந்த

சோபாவில் உட்காரும். உங்கள் தலையில் சந்திரன் போன்ற உருவம் அணிந்திருக்கிறீரே—ஏன் அது.

பரமசிவன்: நான் சந்திரலோகத்திற்கு அடிக்கடி செல்வது. ஆகவே சந்திர வடிவம் போன்று அணிந்திருக்கின்றேன்.

ட்ருமன்: இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன் காந்தியார் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரைப் பார்க்க இங்கிலாந்திற்குச் சென்றார் அப்போது முழம் துண்டோடுதான் சென்றிருந்தார். அது போலவே தாங்களும் என்னைப் பார்க்க வரும்போது முழம் துண்டோடு வந்துவிட்டீரே என்று கேட்டேன்.

பரமசிவன்: நான் காந்தியாரின் சீடன் அல்ல. ஆனால் காந்தியாரைத் தெரியும் நேருவைத் தெரியும். இந்தியாவில் உள்ள ஒவ்வொருவரும் என்னை அறிவார்கள்.

ட்ருமன்: ஓ! நேருவிற்கு நீர் தெரியுமா?-நேரு அண்மையிலே இங்கு வந்திருந்தார். உம்மைப் பற்றி என்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லவில்லையே! தாங்கள் இங்கு வந்ததன் காரணம்?

பரமசிவன்: விஞ்ஞானம் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற விருப்பம். மேலும் எனக்கு ஒரு புது விமானம் தேவை.

ட்ருமன்: சரி, எங்கள் விஞ்ஞான சாலைக்குச் சென்று கற்றுக்கொள்ளுங்கள். பிறகு விமானம் தருகிறோம்.

[பரமசிவன் பல ஆண்டுகள் தங்கி விஞ்ஞானம் கற்றுக் கொண்டு புது விமானத்துடன் கைலாயம் செல்லுகிறார்]

* * *

[இங்கிலாந்தில் அரச மாளிகையின் முன் இரு காவலாளிகள் நின்றுகொண்டிருக்கின்றனர். மகாவிஷ்ணு அங்கு வருகிறார்]

மகாவிஷ்ணு: வணக்கம் ஐயா!

காவலாளிகள்: வணக்கம். தாங்கள் எந்த ஊர்?

விஷ்ணு: வைகுண்டம்.

காவலாளிகள்: தங்களுக்கு என்ன வேண்டும்.

விஷ்ணு: உங்கள் அரசரை நான் பார்க்க வேண்டும்.

காவலாளிகள்: எங்கள் அரசரைத் தாங்கள் பார்க்க முடியாது!

விஷ்ணு: முடியாதா! இந்தியாவிலே இருந்தால் இந்நேரம் என்ன என்ன உபசாரம் செய்வார்கள் தெரியுமா?

காவலாளிகள்: அங்கு எது வேண்டுமானாலும் செய்வார்கள். உம்மைப் போன்ற அதிசயப் பிறவிகளை ஆண்டவன் என்று அர்ச்சிப்பார்கள். எங்கள் நாட்டிலே உம்மைப்போன்ற அதிசயப் பிறவிகளைக் "கண் காட்சி" சாலைகளிலே வைப்போம். இது தான் எங்களுக்கும் அவர்களுக்கும் உள்ள வித்தியாசம். வேண்டுமானால் எங்கள் நாட்டின் பிரதமர் சர்ச்சிலைப் பார்த்துச் செல்லுங்கள்.

விஷ்ணு: சரி, சரி. அப்படியானால் அவரிடமாவது அழைத்துச் செல்லுங்கள்.

(மகாவிஷ்ணு சர்ச்சிலிடம் செல்லுகிறார்)

மகாவிஷ்ணு: இந்திலாந்தின் பிரதமரே! வணக்கம்.

சர்ச்சில்: வணக்கம். நாலுகைகளோடு கூடிய தாங்கள் யார்?

மகாவிஷ்ணு: என் பெயர் மகாவிஷ்ணு நான் இருப்பதோ வைகுண்டம். வசிப்பதோ திருப்பாற் கடல்.

சர்ச்சில்: என்னய்யா! பால் கடல் என்று பச்சைப் புளுகு புளுகுகிறீர். உலகில் இருப்பது எல்லாம் உப்புக் கடல்கள்தான். ஆனால்—நீர் சொல்லுகிறீர், பால் கடல் என்று! பாமரனிடம் சொல்லும். அவன் நம்புவான். படித்தவனிடம், குறிப்பாக பகுத்தறிவு வாதியிடம் சொல்லாதீர் இது போன்ற கட்டுக் கதைகளை!

சரி வாரும் என்னுடன்! ஏறும் என் காரில்.

விஷ்ணு: எங்கு அழைக்கிறீர் என்னை!

சர்ச்சில்: கடற்கரைக்குச் செல்வோம்.

[விஷ்ணுவும் சர்ச்சிலும் கடற்கரைக்குச் செல்லுகின்றனர். அங்கு சில பெண்கள் குளித்துக் கொண்டிருக்கின்றனர்]

சர்ச்சில்: கொஞ்சம் தண்ணீரை அள்ளிக் குடித்துப் பாரும். எப்படி இருக்கிறது?

விஷ்ணு: உப்பாக இருக்கிறது?

சர்ச்சில்: பாலின் ருசி இருக்கிறதா?

விஷ்ணு: இல்லை.

சர்ச்சில்: தண்ணீரைப் பார்த்துச் சொல்லுங்கள். பாலின் நிறம் இருக்கிறதா? என்னய்யா! தண்ணீரைப் பாரும் என்றால் குளிக்கும் கன்னியைப் பார்க்கிறீரே! சரி, சரி. வீட்டுக்குச் செல்வோம் வாரும்.

[இருவரும் திரும்புகின்றனர்]

சர்ச்சில்: உமக்கு நாலு கைகள் இருக்கின்றனவே! அதிசயமாக அல்லவோ இருக்கிறது. எதற்காக பல்சக்கரத்தை விரலில் மாட்டிக் கொண்டிருக்கிறீர்?

விஷ்ணு: அது பல் சக்கரமில்லை. சக்ராயுதம் பகைவரை மாய்க்க வைத்துக் கொண்டிருக்கிறேன்.

சர்ச்சில்: இதுபோன்ற ஆயிரமாயிரம் பல் சக்கரங்கள் எங்கள் நாட்டிலே உற்பத்தியாக்கப் படுகின்றன. ஆனால் ஒரே ஒரு

(10-ம் பக்கம் பார்க்க)

போர்வாள்

சென்னை 1—12—51 சனிக்கிழமை

பண்டிதரின் படப்பிடிப்பு!

"கோடிக் கணக்கான மக்களுடைய உள்ளங்களெல்லாம் காங்கிரஸ் கட்சியினிடம் அளவற்ற பற்றும் பாசமும் கொண்டிருந்தன. அந்தக் கட்சியால் தங்களுக்கு என்னென்ன வெல்லாமோ கிடைக்கப் போகிறது என்று ஆவலுடன் அவர்கள் எதிர்பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஆனால், நான் உட்பட, எல்லாக் காங்கிரஸ்காரர்களுமே அவர்களுடைய நம்பிக்கையை நிறைவேற்றிவைக்கத் தவறிவிட்டோம். அவர்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமையை ஆற்றத் தவறிவிட்டோம்."

"சுதந்தரம் பெற்ற பிறகு, காங்கிரஸ் கட்சி, தவறிழைத்துவிட்டது என்பது உண்மை. காங்கிரஸ் உறுப்பினர்கள் தவறு பல செய்துவிட்டார்கள் என்பதும் உண்மை."

"காங்கிரஸ்காரர்களிலே பலர் தவறான பாதையில் செல்லத் தொடங்கிவிட்டார்கள். வாழ்க்கையிலே உள்ள பல அற்ப சுகங்களின்மீது ஆசைவைத்து, அந்தச் சுகங்களைத் தேடுவதிலேயே தங்கள் கவனத்தைப் பறிகொடுத்துவிட்டார்கள்."

"சமீப காலத்தில், காங்கிரஸ் தன்னுடைய உயர்ந்த இலட்சியங்களை மறந்துவிட்டது. எப்படியோ பல அற்ப ஆசைகளுக்கு ஆளாகிவிட்டது. எந்தப் பொதுமக்களுக்குப் பணியாற்ற அது ஆசைப்பட்டதோ, அந்தப் பொதுமக்களின் தொடர்பை இழந்து, பொதுமக்களைவிட்டு விலகி இருக்க ஆரம்பித்துவிட்டது. இதன் காரணமாகப் பல காங்கிரஸ்காரர்கள் என்ன செய்வது என்றே புரியாமல் திண்டாடித் திகைக்க ஆரம்பித்துவிட்டார்கள்.

"பல காங்கிரஸ்காரர்கள் சோம்பேறிகளாகிவிட்டார்கள். உருப்படியான செயல் எதையுமே செய்யாமல், தங்களுடைய வாழ்க்கையிலே சுகபோகங்கள் வந்து கொஞ்சவேண்டும் என்பதை மட்டுமே எதிர்பார்க்க ஆரம்பித்துவிட்டார்கள்".

"காங்கிரஸ் கட்சிக்கு நாங்கள் அபேட்சகர்களைத் தேர்ந்தெடுத்திருக்கிற முறை எனக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. அது மிக மிக அதிருப்திகரமானதாக இருக்கிறது. எனக்கு மிகுந்த வேதனையை அளிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. என்னுடைய வாழ்க்கையிலே, நான் இதற்கு முன்னால், எத்தனையோ வேதனைகளை அனுபவித்திருக்கிறேன். ஆனால் அந்த வேதனைகள் எவையும், இந்த வேதனைக்கு ஈடாக முடியாது."

"நாம் உதட்டளவில் மிக உயர்ந்த இலட்சியங்களைப் பேசுகிறோம். ஆனால், செயலளவில், தேர்தல் என்று வருகிறபோது, நம்முடைய செய்கைகளின் தரம் மட்டமானதாகத்தான் போய்விடுகிறது."

காங்கிரஸ் கட்சியைப்பற்றியும், காங்கிரஸ் தலைவர்கள்—தளபதிகள்—சேனாவீரர்கள் பற்றியும், அந்தக் கட்சியின் அரும்பெருந் தலைவர் பண்டித நேரு அகமகிழ்ந்து அளித்துள்ள அற்புதமான நற்சான்றிதழ்தான் மேலே பொறிக்கப்பட்டிருப்பது.

நாம் இட்டுக் கட்டிக் கூறுவதல்ல—வேண்டுமென்றே எழுதிவைத்த புனைந்துரையல்ல—எதிர்க்கட்சி என்ற பொச்சரிப்புக் காரணமாகக் கட்டிவிட்ட பொய்யுரை அல்ல—"இந்தியன் எக்ஸ்பிரஸ்" என்னும் தேசிய தினசரியின் 28—11—51 இதழின் ஆறுவது பக்கம் முழுவதும் பண்டிதநேருவின் சொற்பொழிவு வெளியிடப்பட்டிருக்கிறது. அந்தச் சொற்பொழிவிலேதான் காணப்படுகின்றன இந்த வாசகங்கள்.

நவம்பர் 27ம் நாள் சென்னைக்கு விஜயஞ்செய்தார் வீரர் நேரு. அப்போது அவர் ஆற்றினார் ஓர் சொற்பொழிவு. அந்தச் சொற்பொழிவுதான் இந்தியன் எக்ஸ்பிரஸில் வெளியிடப்பட்டிருப்பது.

மீண்டும் படித்துப் பாருங்கள் பண்டிதரின் பொன்மொழிகளை! காங்கிரஸ் தோழர்களுக்கு அவர் கொடுத்துள்ள 'குட்டு' எவ்வளவு கடுரமானதாக இருக்கிறது என்பதைக் கூர்ந்து கவனியுங்கள்.

மக்களை மறந்தவர்கள்!

அற்ப ஆசைக்காக அலைபவர்கள்!

சோம்பேறிகள்!

நம்பிக்கைத் துரோகிகள்!

சுகபோகப் பித்தர்கள்!

மக்களைவிட்டு விலகிவிட்டவர்கள்!

இலட்சியங்களை மறந்து 'சின்னது'களிலே சிந்தையைச் செலவிட்டவர்கள்!

மட்டரகமான தேர்தல் பணி முறை கொண்டவர்கள்!

உதட்டளவிலே உன்னதமாகப் பேசிவிட்டு, காரியத்திலே, தரக்குறைவாக நடப்பவர்கள்!

இவ்வளவு அர்ச்சனைகளும் அடங்கியிருக்கின்றன பண்டிதரின் சொற்பொழிவிலே!

நாம் இதுபோலக் கூறினால்தான் 'அடைப்போம் சிறையில் உம்மை' என்று ஆர்ப்பரிக்கிறார்கள் தேசியவாதிகள். ஆனால் இப்போது இந்தப் படப்பிடிப்பை அளித்திருப்பவரோ பண்டிதநேரு! இதற்கென்ன சொல்லப்போகிறார்கள், பாரதபுத்திரர்கள்?

—

வருந்துகிறோம்

திராவிட முன்னேற்றக் கழகத் தளபதிகளில் ஒருவரும், நெசவாளர் தலைவரும், அஞ்சா நெஞ்சு படைத்த அறப்போர் வீரரும், நம் கெழுதகை நண்பருமாகிய தோழர் சேலம் சித்தையன் அவர்களின் அருமைத் தாயார் 28—11—51 அன்று இயற்கை எய்தினார் என்பதறிந்து மிகவும் வருந்துகிறோம். நண்பர் சித்தையனுக்கு நம்முடைய ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

ஏக்கத்தின் எதிரொலி

"தமிழாதன்"

வேலப்பா! ஏனப்பா விம்மி யழுகின்றாய்? உன் கண்ணீராறிற்கு ஓர் அணைக்கட்டு கட்டப்பா! போதும்! பிறந்தது முதல் இது வரையிலும் உன் வரலாறு கண்ணீரால்தான் எழுதப் பெற்றது. இப்போது மட்டும் அதற்கு விதிவிலக்கா? விம்மாதே! உன் விம்மலைக் கேட்டு உன் மனைவி சிவகாமி எழுந்திருக்கமாட்டாள். "அழாதே கண்ணாளா" என்று ஆறுதல் மொழிய மாட்டாள். உன் வீட்டிலுள்ள இருளைப் போக்கக்கூட ஒளியில்லையே! அதைவிட இப்பொழுதுள்ள உன் மன இருளை எப்படிப் போக்க முடியும்? நாள் முழுதும் வேலைசெய்தேன்—ஓடாய்த் தேய்ந்தேன்—மாடாயுழைத்தேன் என்று பொது உடமை வாதம் புரிகின்றாயா? நீ என்ன சொன்னால்தான் என்ன? யார் காதில் விழப்போகிறது? உன் உருக்கமான மொழிகள் உன் ஓட்டைக் குடிசைவழியே சென்று உலகமுழுதும் பிரதிபலித்தாலும் உனக்கு ஆதரவு தரமாட்டார்களப்பா இந்த அநியாயக்காரர்கள்.

'சோ' என்று மழை பெய்கின்றது வெளியில். ஏன் உன் ஓட்டைக் குடில் கூட மழைத் தண்ணீருக்கு வரவேற்பளிக்கின்றது. உன்மேல் கூட சில துளிகள் விழுகின்றனவே அவைகள் உன் உடலைத்தான் குளிராக்க முடியும். ஆனால் உன் உள்ளத்திலுள்ளே கனல்போல் ஜ்வாலை விட்டெரியும் நெருப்புச் சுடரை அந்த மழைத்துளிகள் அழிக்க முடியாது. நிறுத்து உன் அழுகையை! நடக்க வேண்டிய காரியத்தைப் பார்! பாவம் உன்னைப் பார்க்கும் பொழுது பரிதாபகரமாக வல்லவா இருக்கின்றது—இல்லை பரிதாபப்படாமல் சிரிக்கவா தோன்றும்—வேலப்பா! நான் உன்னைப் பார்த்துத்தானப்பா சிரிக்கின்றேன்—கொட்டுகின்ற மழையில் காட்டமுடன் வேலை பார்த்தாய் உன் எஜமானன் வீட்டில்—குளிர் தாங்க முடியவில்லை. உன்னிடம் எங்கே இருக்கின்றது போர்வை—அதைத் தொட்டுப் பார்த்தது கூடக் கிடையாதே. ஏன் தொட்டுப் பார்க்கவில்லை — தொட்டிருக்கின்றாய். அன்று உன் எஜமானன் குழந்தை அசுத்தப் படுத்திய போர்வையை நீ சுத்தப் படுத்த எடுத்துக் கொண்டு போகவில்லையா?-நீ அதைத்தொட்டு விட்டால் அது உனக்கு உரிமையாகிவிடுமா?—நீ தொட்டு, கஷ்டப்பட்டு மணஞ் செய்து கொண்ட மனைவியே புழுதித் தரையில் கண்ணைமூடி கட்டைபோல் கிடக்கின்றாளே! அவளை நினைக்கும் பொழுதுதானே உன் இதயம் குமுறுகின்றது—குமுறாமல் பின் அமைதியாகவா இருக்கும்—நீ என்ன மனைவி இறந்தவுடன் இரண்டாம் கலியாணம் செய்து கொள்ளும் பொருளாதார வசதி உள்ளவனா?—அல்லது பொக்கிஷ மந்திரி வேலைதான் உனக்கு அளிக்கப்பட்டிருக்கின்றதா—பாவம்! சிவகாமியை மணம் செய்து கொள்வதற்கே மாடாயுழைத்தாயே பல ஆண்டுகள்.

வேலப்பா! உன் மனைவி ஏன் இறந்தாள்? அவளுக்கென்ன காசநோயா அல்லது இருமலா? அவள்தான் தினசரி உழைத்து உழைத்து உருக்குலைந்தவளாச்சேப்பா!—அவளிடம் எப்படி நோய் வந்து வாலையாட்டமுடியும்—இல்லை மனநோய்தான் காரணமாயிருக்கலாமென்று ஐயப்படுகின்றாயா?—அப்படி நினைப்பாயானால் நீதான் குற்றவாளி—பிறரைப்பற்றித்தப்பபிப்ராயம்கொள்வதே தவறு என்று அறிஞர்கள் சொல்லக் கேள்விப்பட்டிருக்கிறாயா? அல்லது சிந்தனைப் படகையாவது செலுத்தியிருக்கின்றாயா? —உனக்கு எங்கே சிந்திக்க நேரமிருக்கின்றது—காலை முதல் மாலை வரைஎஜமானன் வீடேகதியென்றுகிடக்கும்உனக்கு சிந்திக்க நேரமில்லைதான்—அதனால்தான் நீ அப்படி நினைக்கின்றாய்—கலியாணமான தினமுதல் உன்னுடன் நேசமாய்த்தானே இருந்தாள்—உன்னலமே தன்னலமென்றிருந்தாளே—அப்படியிருக்க அவள் மனநோயாலும் மாண்டிருக்க முடியாது—அவளுடைய சாவு உனக்குப் புரியாத புதிரப்பா—அப்படியின்றி நீ அதைப் புரிந்து கொண்டிருந்தாலும் மரித்துக் கொள்ள வேண்டியவன் தானப்பா நீ—இல்லை உனக்கு ஆவேசம் உண்டாகலாம் உன் மனைவி இறந்த வரலாறு கேட்டு. ஆனால் அது அரைக் கணத்தில் மறைந்துவிடும். கண்ணீரைத் துடைத்துக் கொள். உன் மனைவி மரணப்படுக்கையில் எங்ஙனம் சேர்க்கப்பட்டாள்என்பதைக் கூறுகின்றேன் கேள்.

வீட்டிலே அரிசியில்லை. நாள்முழுதும் வேலை செய்த அவள் வீட்டில் சும்மா படுத்துத் தூங்கப் புறப்பட்டாளா? இல்லை. உனக்கு உணவு படைக்கத்தானப்பா அரிசி தேடினாள். நீ என்னபெரியஜமீன்தாரா? அல்லது மிராசுதாரா? ஏதோ எஜமானன் வீடு உண்டு நான் உண்டு என்று எண்ணியவன் தானே நீ? வீட்டில் உனக்கு வேண்டிய தானியத்தை சேகரித்து வைத்திருந்தாயா?—அரிசி இல்லை என்று தெரிந்ததும் அவள் சும்மாவிருக்கவில்லை, கையில் பெட்டியெடுத்துக்கொண்டு கொட்டுகின்ற மழையில் நடந்தாள் உன் எஜமானன் வீடு நோக்கி—நீ என்ன உட்கார்ந்துகணக்கெழுதும் கணக்குப்பிள்ளையா? அல்லது குமாஸ்தாவா? உன் மனைவி சென்ற நேரத்தில் நீ எந்தக் குப்பைமேட்டில் நின்று கொண்டிருந்தாயா? உன் மனைவி சென்ற சமயத்தில் உன் எஜமானரைத் தவிர வேறு ஒருவரும் அங்கே இல்லை. உன் எஜமானரின் மனைவி அடுத்தவீட்டு அம்மாமி மகா நாட்டிற்கு தலைமை வகிக்கச் சென்றுவிட்டாள். உன் எஜமானரின் மகன் தேர்தல் பிரசாரம் செய்யப் போய் விட்டான். ஏன் இவர்களைப்பற்றி சொல்லுகின்றேன் என்று கவலைப்படுகின்றாயா? ஏதோ ஏழையாகிய உன்னையும் அவனையும் ஒப்பிட்டுப்பார்த்தேன்.

எஜமானரின் கண்ணிற்குள் சிவகாமி கற்பகவிருட்சம்போல்தோன்றினாள் போலும், சிவகாமி என்று குழைவுடன் அழைத்தான் உன் எஜமானன். அவளிருந்தால் அவளிட

(12-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வேறுபாடு. இதை நீர் ஆயுதம் என்கிறீர். நாங்கள் சக்கரங்கள் என்கிறோம். வேண்டுமானால் இன்னொரு சக்கரம் தருகிறோம். மற்றொரு விரலிலும் மாட்டிக் கொள்ளும்.

விஷ்ணு: நான் சக்கரம் வேண்டும் என்று வரவில்லை. விஞ்ஞானம் கற்றுக்கொள்ள வேண்டும். அதோடு ஒரு 'சப்மரைன்' வேண்டும்.

சர்ச்சில்: உங்கள் இஷ்டப்படியே செய்யுங்கள்.

[மகாவிஷ்ணு பல மாதங்கள் தங்கி விஞ்ஞானம் கற்றுக்கொண்டு விமானம், சப்மரைன் சமேதராய் வைகுண்டம் செல்லுகிறார்]

* * *

[ரஷியாவில் ஸ்டாலின் தன் வீட்டிலே இருக்கிறார். ஒரு காவலாளி வருகிறான்]

காவலாளி: வணக்கம், தங்களைப் பார்க்க நான்கு முகங்களோடு கூடிய ஒருவர் வந்திருக்கிறார்.

ஸ்டாலின்: உடனே அழைத்து வா

பிரமதேவர்: வணக்கம் மன்னவரே!

ஸ்டாலின்: நான் மன்னவன் இல்லை. நாட்டின் தொண்டன். தங்களின் பெயர்?

பிரமதேவன்: பிரமதேவன்.

ஸ்டாலின்: ஊர்?

பிரமதேவன்: பிரம்மலோகம்.

ஸ்டாலின்: புது ஊர்! கேள்விப்பட்டதில்லை! தங்களுக்கு என்ன வேலை, அங்கு?

பிரமதேவன்: படைப்புத் தொழில்!

ஸ்டாலின்: அப்படி என்றால்?

பிரம்மதேவன்: மக்களை உண்டாக்குவது.

ஸ்டாலின்: மக்களை உண்டாக்குவதா? உங்கள் நாட்டில் நீர் ஒருவர் தான் ஆண் பிள்ளையா? மற்றவரெல்லாம் பெண்களா?—இல்லை அத்தனை பேருக்குமே நீர் ஒருவர்தான் கணவரா?

பிரமதேவன்: இல்லை நான் படைப்புத் தொழில் புரிகிறேன் மந்திரத்தினால் மக்களை உண்டாக்குகிறேன்.

ஸ்டாலின்: மிக்க மகிழ்ச்சி! உண்டாக்குவதும் உண்டாக்குகிறாய்! ஏன் ஐயா பணக்காரன் ஏழை என்ற வித்தியாசத்தோடு உண்டாக்குகிறாய்? எங்கள் நாட்டிலே பாருங்கள் எல்லோரும் சமம். எங்கள் நாட்டின் இக்கொள்கையை உங்கள் நாட்டிலும் பரப்புகிறீர்களா? தாங்கள் இங்கு வந்ததிற்குக் காரணம்?

பிரமதேவன்: ஒரு விமானம் தேவை.

ஸ்டாலின்: இதற்கு முன் தாங்கள் உபயோகப்படுத்திக் கொண்டிருந்த விமானத்தின் பெயர்?

பிரமதேவன்: நாய் வாகனம்.

ஸ்டாலின்: நாயா! வெட்கமாக இருக்கிறதே! உமக்கு விமானம் ஒன்று அல்ல ஒன்பது வேண்டுமானாலும் தருகிறோம். நீர் படைப்புத் தொழில் செய்வதாகச் சொல்லுகிறீர். எங்கள் நாட்டில் மக்கள் எப்படி வாழ்கிறார்களோ அப்படியே உங்கள் நாட்டிலும் வாழும்படி செய்யுங்கள். சரி, சென்று வரலாம்.

பிரமதேவன்: வருகிறேன். வணக்கம். பிரமதேவன் விமானத்தோடு பிரமலோகம் செல்லுகிறார்.

* * *

மும்மூர்த்திகளும் விஞ்ஞான வீரர்களாய்த் திகழ்கிறார்கள்! ஆனால் நாம்.................?

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வழிவகுக்கும். பிற கட்சிகளுக்கு ஓட்டுப் போடுவது குழப்பத்தையும், நாசத்தையுமே உருவாக்கும்" மத்திய மந்திரி காட்கில் தேர்தல் பிரச்சாரம் செய்கிறார் இப்படி.

மக்களென்ன மரக்கட்டைகளா? மண் பொம்மைகளா? சீரான முன்னேற்றத்துக்கு வழி வகுக்குமாம்! ஐந்தாண்டு ஆட்சியிலே எந்த முன்னேற்றத்தைச் செய்து விட்டது?

அடக்கு முறையிலே முன்னேற்றம்.

லஞ்ச ஊழலிலே முன்னேற்றம்.

உணவு நெருக்கடியிலே முன்னேற்றம்,

ராணுவச் செலவிலே முன்னேற்றம்.

மந்திரிகளின் சம்பளத்திலே முன்னேற்றம்.

காட்கில் மறுக்க முடியுமா? எந்தத் துறையில் முன்னேற்றத்தைக் கண்டது இந்த சர்க்கார்? "காங்கிரஸுக்கு ஓட்டுப் போடுங்கள். தேர்தலுக்குப் பின்னர் காங்கிரஸ் சீர்பட்டுவிடும்" பண்டிதர் பேசுகிறார் ஹிமாசல பிரதேசத்தில்! வேடிக்கையாகவும், விசித்திரமாகவும் இருக்கிறதல்லவா நேருவின் பேச்சைச் கவனிக்கும்போது!!

'பாடங்களை நீ ஒழுங்காகப் படிக்கவில்லை ஆகவே உன்னை நான் மேல்வகுப்புக்கு தேர்ந்தெடுக்க முடியாது'

ஆசிரியர் கூறுகிறார் மாணவனைப் பார்த்து.

'தேர்ந்தெடுத்து அனுப்பிவிடுங்கள். அடுத்த வருஷம் ஒழுங்காகப் படிக்கிறேன்'

மாணவன் கூறுகிறான் ஆசிரியரைப் பார்த்து. பண்டிதரின் பேச்சும் மாணவனின் பேச்சைப்போல் தான் இருக்கிறது!

காங்கிரஸ் எந்த லேபிலையும் ஒட்டிக்கொண்டு மக்கள் முன் வர முடியவில்லை இன்று. நாடாள்வோர் வெளியில் தலைநீட்ட முடியவில்லை.

'ஆறவுன்ஸ் சர்க்கார்' என்கிறான் ஒருவன். 'பஞ்ச மந்திரி' என்கிறான் இன்னொருவன். 'பட்டினி அதிகாரி' என்கிறான் மூன்றும் மனிதன். கைகொட்டி கேலி செய்கின்றனர் மக்கள்.

(15-ம் பக்கம் பார்க்க)

மூன்று செய்திகள்—முக்கியமான கேள்வி

பொதுமக்களே—பதில் கூறுங்கள்

உலகத்தின் அன்றாட வாழ்க்கை அனுபவங்களையும் நிகழ்ச்சிகளையும் தொகுத்துப் பதிவுசெய்யும் ரிகார்டுகள்தான் செய்தித்தாள்கள். அவற்றின் மூலம்தான் இப்பரந்த நிலப்பரப்பின் பல்வேறு பகுதிகளிலுள்ள மக்களின் வாழ்க்கை முறைகளையும், மனித சமுதாயம் அறிவுத்துறை, ஆராய்ச்சித்துறை, விஞ்ஞானம் முதலியவற்றில் பெற்றுள்ள வளர்ச்சியையும் ஓரளவு நிதானித்துக் கணிக்க முடியும். அவை ஒரு நாட்டைப் பற்றிக் கொடுக்கின்ற செய்திகள், ஒரு நாட்டின் கண்ணியத்தைப் பெரிய அளவில் பாதிக்கும் சக்திபெற்றவை. ஆனால், தன் நாட்டின் கண்ணியததைக் காப்பதையே குறிக்கோளாகக் கொண்டு ஒரு செய்தித்தாள் சில செய்திகளை இருட்டடிப்புச் செய்வதோ, அன்றி திருத்தி வெளியிடுவதோ, செய்தித் தாள்களின் பண்பாட்டிற்கு முரண்பட்ட செயலாகும். ஆகவே, நாட்டின் வளர்ச்சியில் நாட்டம் கொண்டுள்ள செய்தித்தாள்கள் அனைத்தும் அவற்றின் நாட்டுப்பற்றைக் குறுகிய வழியில் செலுத்தத் தலைப்படுமானால், அவை, தம் கடமையில் தவறியதோடு, வளர்ந்துவரும் மனித நாகரிகத்தின் குறுக்கே நிற்கும் பெருந்தடைகளாகவே அறிவுள்ளோர் அவற்றை கருதுவர். இருந்தும் இந்நாட்டிலுள்ள பெரும்பாலான செய்தித்தாள்கள் 'செய்தித்தாள்' (Newspaper) என்றபெயரில் வெளியிடப்பட்டாலும், அவை, தங்கள் மனம்போனபடி செய்திகளை இருட்டடிப்புச் செய்தும், கூட்டியும் குறைத்தும், சில சந்தர்ப்பங்களில் திருத்தியும் வெளியிட்டு, 'செய்தி விமர்சனத் தாள்களாகவே' (Critical Reviews) வெளிவருகின்றன. ஒரு நாட்டில் பிரபலமாக உள்ள சில செய்தித் தாள்களாவது செய்திகளுக்கு 'வர்ணம்' தீட்டாமல் வெளியிடும் நிலையில் இருக்கவேண்டும்.

இம்மாதிரி நல்ல முறையில், பத்திரிகைப் பண்பு குலையாமல், நடைபெறும் செய்தித்தாள்கள் நாட்டு மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாகின்றன. தவிர,

[" மங்களப் பிரியன் "]

அகில உலக மக்கள் அக்குறிப்பிட்ட நாட்டின் நிலைதெரிய அந்தச் செய்தித்தாளையே ஆதாரமாகக் கொள்வர். ஒரு நாட்டை ஆளுகின்ற அரசாங்கமோ அதன் ஆட்சி அலுவல்களை நடத்துகின்ற சிப்பந்திகளோ, இம்மாதிரி செய்தித் தாள்களைப் பார்த்து அறிந்துகொள்ள வேண்டிய பாடங்கள் மிகப் பல. ஒவ்வொரு நாளும் வெளியாகும் செய்தித்தாளகள் பல்வேறு நாடுகளைப்பற்றிய விதவிதமான செய்திகளை வெளியிடுகின்றன. அவற்றை ஒரு சேரப் பார்க்கின்ற மக்கள் ஒரு நாட்டின் நிலையை இன்னொரு நாட்டின் நிலையோடு ஒப்பிட்டுப் பார்த்து, அந்தச் செய்திகளை அவர்களது அறிவு என்ற கல்லிலே உரைத்து அந்த நாடுகளின் மாற்றுகாணத்தான் முற்படுவர். அப்படிக் காணுகின்ற மக்களின் கருத்தில் ஒரு நாட்டைப் பற்றி மட்டரக நினைப்பு ஏற்படாமல் இருக்கவேண்டுமானால், அந்நாட்டுத் தலைவர்களின் பேச்சும் செயலும் அவற்றிற்கிடமளிக்காத வகையில் அமைய வேண்டும். அவர்கள் வெளியிடுகின்ற ஒவ்வொரு சொல்லும் உலகமக்களின் சிந்தனைத் தாரசிலே ஏறி நிறைபெறுகின்றன என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது. இந்தப் பொறுப்பை ஆட்சியாளர்கள் புரிந்துகொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

தினசரி செய்திகளைப் படிக்கின்ற ஆளவந்தார்கள் நம் நாட்டுச் செய்திகளையும், பிற நாட்டுச் செய்திகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும் வகையில் சில நிமிடங்களையாவது . செலவழிப்பார்களானால் (ஓட்டல், சினிமா தியேட்டர் திறப்பு விழாக்களுக்கும், பள்ளிக்கூடங்கள், மருத்துவ விடுதிகள் மூடு விழாக்களுக்கும் செலவழிக்கும் நேரம் போக மீதி நேரத்தைத்தான் குறிப்பிடுகிறேன்...... அதுபோக மீதிநேரம் எங்கே இருக்கப் போகிறது என்கிறீர்களோ....) நம் நாட்டு நிலையுணர அவர்களுக்கு நல்ல சந்தர்ப்பம் ஏற்படுவதோடு, அவர்களது காலத்திற்கொவ்வாத திட்டங்களைக் கைவிட வாய்ப்பும் ஏற்படலாம்.

(14-ம் பக்கம் பார்க்க)

வேகமாக அச்சாகி வருகிறது! விரைவில் வெளிவருகிறது!!

திராவிடர் டைரி—1952

திராவிடர் அனைவரும் பெற்றிருக்கவேண்டிய மிகச்சிறந்த நாட்குறிப்பு

ஒவ்வொரு தி. மு. க. தோழருக்கும் பூரிப்பளிக்கத்தக்க புதுவகை வெளியீடு.

இளைஞர் உலகத்தின் இதயகீதமாக விளங்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பற்றிய எல்லா விவரங்களும் அடங்கிய எழில்மிகு ஏடு.

உங்கள் பிரதிக்கு உடனே முந்திக் கொள்ளுங்கள்!

சென்ற ஆண்டுபோல கிடைக்கவில்லையே என்று பிறகு வருந்தாதீர்கள்!

இந்த ஆண்டின் நாட்குறிப்பில்

* அறிஞர் அண்ணாதுரையின் சென்ற 15 ஆண்டு காலப் பேச்சு, எழுத்து ஆகியவற்றிலிருந்து அரிதின் முயன்று திரட்டப்பட்ட அரிய பொன்மொழிகள் ஒரு நாளைக்கு ஒன்று வீதம் 365—இவை, சென்ற இரண்டு ஆண்டு டைரிகளிலும் வெளிவராதவை, புதியவை, சிறந்தவை.
* தி. மு. க. பொதுச்செயலாளர் அண்ணாவின் புதிய புகைப்படம்.
* தி. மு. க. மாநிலமாநாட்டின் திறப்பாளர் நீலமேகம், கண்காட்சித் திறப்பாளர் சிற்றரசு, விளம்பரச் செயலாளர் கருணாநிதி, செயலாளர்கள் மணிமொழியார்—மனோகரன், வரவேற்புத் தலைவர் என். வி. நடராசன் ஆகியோரின் படங்கள்.
* தி. மு. க. கொடி. இரு நிறத்தில்
* மதுரைப் பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட கழகச் சட்டதிட்டத்தின் சுருக்கம்.
* இதுவரை நடத்தப்பட்ட நம் மாநாடுகளின் சுருக்கங்கள்
* தலைமைக் கழகப் பொதுக்குழு, துணைக் குழுக்களின் விவரங்கள், உறுப்பினர் பெயர்கள்
* தி.மு.க, கிளைகள் 650ன் விவரங்கள், அவற்றின் செயலாளர், துணைச் செயலாளர், பொருளாளர், விளம்பர உறுப்பினர் பெயர்கள்—மாவட்ட வாரியாக
* மாவட்டக் கழகங்களின் விவரம்
* தி.மு. மாணவர் கழகவிவரங்கள், செயல் உறுப்பினர் பெயர்கள்.
* திராவிடர் கொண்டாடற்குரிய திருநாட்கள்.
* அரசினர் விடுமுறை நாட்கள்
* தபால் தந்தி கட்டண விவரங்கள், விற்பனைவரி வருமான வரி விவரங்கள், ஆவணப் பதிவு (ரிஜிஸ்ட்ரேஷன்) கட்டணங்கள் மற்றும்பல இன்றியமையாத குறிப்புகள்.

அழகான அமைப்பு 550 பக்கங்கள் விலை ரூ. 1-0-0

ஒரு பிரதி வேண்டுவோர் சாதாரணத் தபாலில் அனுப்ப ரூ, 1—2—0-ம், பதிவுத் தபாலில் அனுப்ப ரூ. 1—6—0-ம் அனுப்பவேண்டும்,

விற்பனையாளர் கழிவு 20% அனுப்பும் செலவு வேறு.

முன்பணமின்றி எவருக்கும் அனுப்பப்பட மாட்டாது,

போர்வாள் அலுவலகம்

பவழக்காரத் தெரு, சென்னை 1.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

த்தில் பணம் வாங்கிக்கொண்டு போகலாமினு வந்தேன் என்று கூறினாள் சிவகாமி. எஜமானன் உள்ளே சென்றான். வெள்ளை உள்ளம் படைத்த உன் மனைவி உன் எஜமானனைத் தங்கமான மனிதன் என்று தான் அப்போது எண்ணினாள். அது டுப்ளி கேட்டு தங்கம் என்பது இப்பொழுதல்லவா தெரிகின்றது, எங்கும் ஜகஜ் ஜோதியாய் மின்னொளி பரவிய இடமுழுவதும் காரிருள் படர்ந்து. சிவகாமி வெளியே போக முயன்றாள்! இரு சிவகாமி இந்த பாழாய்ப்போமூ லைட் அணைஞ்சு போச்சு சற்றுநேரத்தில் வந்துவிடும் என்றான், உன் எஜமானன். இல்லை நான் போகவேண்டும் என்று கடுமையாகவே கூறினாள் உன் மனைவி வழியே தெரியவில்லை. எங்கும் இருள் இருட்டில் ஏதோ ஒன்று—ஆம் அது உன் எஜமானரின் கைதான். சிவகாமின் உள்ளத்திலேயும் இருள். தப்பிக்க முயன்றாள்—ஆனால் அவளுக்கு எங்கிருந்துதான் மயக்கம் வந்ததோ—பல்லியின் வாய்க்குள் பூச்சிதானே விழுந்தது போலாயிற்று.

சிவகாமி கண்ணை விழித்துப் பார்த்தாள். தான் அலங்கோலமாக இருப்பதைப் பார்த்து சுருட்டியெழுந்தாள். மின்னொளி மறுபடியும் பரவிற்று. இருள் அகன்றது. ஆனால் சிவகாமியின் உள்ளத்திலுள்ள இருள் அகலவில்லை. தன்னை ஒழுங்கு படுத்திக்கொண்டு கொட்டும் மழையில் நனைந்து கொண்டு சென்றாள் என் மனைவி. அதிர்ச்சி, காய்ச்சல் ஆகியவைகள் படையெடுத்து உன் மனைவியை மரணப் படுக்கையில் ஆழ்த்திவிட்டன. வேலப்பா! இதுதான் உன் மனைவி இறந்தவரலாறப்பா.

"இல்லை நண்பரே இல்லை! நீர் ஒரு கொள்ளைக் கூட்டத்தலைவனுக இருப்பது நியாயமற்றதல்ல. உண்மை வீரனுக, வெற்றி வீரனுக விளங்கக்கூடியவர் கொள்ளைக் கூட்டத்தலைவனுகவும் இருக்கலாமென்பதை நீர் கூறியவைகளிலிருந்து தெரிந்து கொண்டேன். வெற்றி வீரனுக்கிருக்க வேண்டுமென்று நான் வரையறுத்துச் சொல்லிய சிறந்த பண்புகளத்தனையும் உம்மிடம் பொதிந்து கிடக்கின்றன என்பதை இந்த மடல்களும் உமது பேச்சும் எனக்குத் தெளிவாக எடுத்துக் காட்டிவிட்டன! நீர் ஒரு மாவீரர்! வெற்றிவீரர்!......" என்று பரிவின்பன் தன் கருத்தை அன்பு மொழியால், புகழ் மெருகேற்றப்பட்ட சொற்களால் தெரிவித்தான்.

"பரிவின்பரே! உம்மிடம் இன்னென்றைச் சொல்ல மறந்தேனே! ......நான் கொள்ளையடித்து, மக்களுக்குத் தராமல் வைத்திருக்கும் பொருட்களும் சில இருக்கின்றன. அவை என்னுடைய சொந்த நலனுக்காகப் பத்திரப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனவா என்று கேட்கிறீரா?.........இல்லை, அதற்காக இல்லை. மந்திகளிடம் மலர்மாலைகள் இருத்தல் கூடாது; பொறுப்பில்லாதவர்களிடம் மேன்மை மிகுந்த பொருட்கள் இருப்பது ஞாயமற்றது; என்னும் எண்ணத்தோடு கொள்ளையிடப்பட்டவை அவை! பதியம் வைத்து, தான் உண்டாக்கிய மல்லிகைச் செடி, தன்னுடைய எதிரியின் அழகிய வீட்டின் இனிய பூந்தோட்டத்திலிருப்பதைவிட, தன்னுடைய நண்பனின் எளிய குடிசையின் முன்பு இருப்பதைத்தான்-இருக்கவேண்டுமென்றுதான் ஒரு தோட்டக்காரன் எண்ணுவான், ஆசைப்படுவான்! அவன் நண்பனும் அதைத்தான் விரும்புவான்!.....தோழரே! சித்தத்தின் சிரசிலே இருக்கவேண்டிய மணிமுடி சிறுநரியின் தலையிலே வைக்கப்படலாமா? வீரனின் வீரவாளினை, வீரமோ, விவேகமோ இல்லாத ஒரு வீணன் தன் இடையிலே செருகிக்கொள்ளலாமா? இது நியாயமா?......என்ன, நண்பரே! நான் சொல்வது உமக்கு ஒன்றும் விளங்கவில்லையா? விளங்காததான். அவைகள் யாவையும் உமக்கு விளக்கிச் சொல்லுகிறேன் என்னுடன் வாருங்கள்!" என்று கூறிவிட்டு அவன் அந்த அறையிலிருந்து மற்றொரு அறைக்கு நடந்தான். பரிவின்பனும் உதயனும் அவனைப் பின் தொடர்ந்தார்கள்.

பதினைந்தாம் பகுதி

தேன் கூடு

அந்தச் சிறு அறையினுள் அவன் நுழைந்தான். ஒரு சிறு அகல் விளக்கு அங்கு மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. அங்குச் சூழ்ந்திருந்த இருளை அது முழுமையாக அகற்றவில்லை. பரிவின்பனும் உதயனும் அந்த இருட்டறையில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றார்கள். கொள்ளைக் கூட்டத் தலைவன் அந்த அகல் விளக்கையணுகி அதை யெடுத்து, கையிலேந்திக் கொண்டு விளக்குத் தண்டாக இருந்த சிறிய கல்லை அகற்றி, தரையில் இருந்த ஒரு சிறு திருகாணியை முறுக்கினன், தரையில் பிளவேற்பட்டது. அவன் கைகள் பூமிக்கடியில் சென்றன. ஒரு அழகிய பெட்டியை ஏந்திக் கொண்டு அவை வெளியே வந்தன. மறுபடியும் தரையில் ஏற்பட்ட பிளவு, அவன் அந்தத்திருகாணியை முறுக்கிறதால் மறைந்துவிட்டது.

அந்தப் பெட்டியைத் திறந்தான். அடுத்த விநாடி அந்த அறை ஒளிமயமாகியது. பரிவின்பனின் கண்களும் உதயனின் கண்களும் அந்த ஒளியில் கூசின. கொள்ளைக் கூட்டத் தலைவன் அப்பெட்டியிலிருந்த இரண்டு துண்டுகளை — ஒளிதந்த அந்த இரு கட்டிகளை—வெளியே எடுத்து வைத்தான்.

பிரகாசமான ஒளியால் கூசப்பட்ட அவர்கள் இருவர்கண்களும், அதுவரை என்றுமே கண்டிராத விருந்தினை உண்டன. அந்தவிருந்து அவர்களுக்கு வியப்பையும் மகிழ்ச்சியையும் உணர்ச்சியையும் ஊட்டியது!

ஆம். அந்த அறையின் சுவர்களிலேதான் அவர்கள் கண்களுக்கு விருந்து அமைந்திருந்தது. அகல் விளக்கின் உதவியால் தன்னுருவத்தைத் தெளிவாகக் காட்டிக் கொள்ள முடியாத நிலையிலிருந்த அந்த இனிய கண் கவரும் விருந்து, மாணிக்கக் கற்களின் உதவியைப் பெற்ற மகிழ்ச்சியால் தன்னை அழகிய முறையிலே அப்பட்டமாக வெளிப்படுத்திக்கொண்டது! பலப்பல வர்ணங்களில் தீட்டப்பெற்று எழில்மெருகுடன் திகழ்ந்த அந்த இனிய ஓவியங்கள் பரிவின்பனின் கண்களினூடே பாய்ந்து சென்று அவன் இதயத்தைத் தொட்டு சிந்தனை நீரை பெருவேகத்தில் கசியச் செய்தன. அச்சிந்தனை ஆறு வெகு விரைவில் 'முடிவு' என்னும் கடலில் சங்கமமாகிவிட்டது! இன்பதாசர் அவன் கண்கள் முன்பு காட்சியளித்தார்! அவருடைய உருவம்! அவர் கூறியகதை! இரண்டும் அவன் மனதிலே மிதந்தன! அவர் குறிப்பிட்டுச் சொல்லிய ஓவியங்களத்தனையும் அந்தச் சுவற்றில் மாட்டப்பட்டிருந்தன. வெட்டப்பட்ட விரல்களின் விநோதமான சக்தியை அவை வெளிப்படுத்தின. உடைந்த உள்ளத்திலிருந்து கசிந்த இரத்தக் கறையும் கண்ணீரும் தோய்ந்த அந்த வரலாறு—உலர்ந்த உதடுகளைப்

(15-ம் பக்கம் பார்க்க)

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

நவம்பர் ௴ 21௳ "மெயில்" பத்திரிகையில், முதல் பக்கத்தில் அடுத்தடுத்துக் காணப்படுகின்ற மூன்று செய்திகளை ஆளவந்தாருக்கும், அறிவுள்ளோருக்கும் காணிக்கையாகச் சமர்ப்பிக்கிறேன். ஒரு செய்தி, டாலர் ஏகாதிபத்யத்தை அவனி முழுவதும் பரப்பத் திட்டமிட்டுக் கொண்டிருக்கும் அமெரிக்காவைப் பற்றியது. இன்னொன்று, சமதர்ம சகாப்தத்தை ஆசியாவில் ஆரம்பித்து வைக்கும் பேறுபெற்றுள்ள சீனாவைப் பற்றியது. மூன்றாவது செய்தி, பாரதமாதாவின் அருந்தவப் புதல்வர் ஆற்றியுள்ள சொற்பொழிவு—நம் நாட்டைப் பற்றியது. இம் மூன்று செய்திகளையும்—ஒரே நாளில்—பத்திரிகையின் ஒரே பக்கத்தில் பார்க்கின்ற உலக மக்கள் என்ன நினைத்திருப்பர் என்று எண்ணவும் வெட்கம் ஏற்படுகிறது. என்ன நினைத்திருப்பர்? நம் நிலையையும் போக்கையும் எண்ணி நகைத்திருப்பர். இந்தியத் துணைக்கண்டத்தில் வாழ்கின்ற எவரும் அச்செய்திகளை இணைத்துப் பார்க்கும்பொழுது வேதனைப்படாமல் இருக்க முடியாது, விவேகமிருந்தால். இருந்தும் இந்த வேதனை தரும் செய்திகள் பத்திரிகைகளின் அன்றாட செய்திகளாகிவிட்டன. ஆனால், ஆட்சியாளர் இதில் கவனம் செலுத்தாது மட்டுமல்ல; அவர்களே இச் செய்திகளின் பிதாவாகவும், கதாநாயகர்களாகவும் ஆகிவிடுகிறபோது...!

படிப்பவர்களை வெகுநேரம் குழப்பத்தில் வைத்திருக்க நான் விரும்பவில்லை. அம்மூன்று செய்திகளின் சுருக்கத்தை, இதோ, கீழே தருகிறேன்;

அமெரிக்கச் செய்தி:

நிவேதா பாலைவனத்தில் அமெரிக்க அணுசக்தி ஆராய்ச்சி. இந்த ஆராய்ச்சியின் விளைவாக விஞ்ஞானத் துறையில், குறிப்பாகப் போர்ச் சாதன அமைப்பில் புதிய முன்னேற்றங்கள் ஏற்படலாம். நியூகிளியர் விஞ்ஞானத்திலும் (Nuclear Science) புதிய புரட்சிகரமான மாறுதல்களை எதிர்பார்க்கலாம்.

டோக்கியோ செய்தி (சீனாவைப் பற்றியது).

சீன ராணுவ எஞ்சினியர்கள் கடந்த சில மாதங்களில் ஒரு பெரிய காரியத்தைச் சாதித்துள்ளனர். சீனாவிலிருந்து திபேத்திற்குக் கரடுமுரடான பூமியைச் செப்பனிட்டு அவர்கள் அமைத்துள்ள போக்குவரத்துசாலை (Highway) சீன—திபேத் வியாபாரத்தை மிக உயர்ந்த முறையில் வளர்க்கும் சக்திபெற்றது. அந்தச் சாலை பிரம்பாளு மலையில் 15,000 அடிவரை செல்லுகிறது.

இராமராஜ்யச் செய்தி (குடியரசுத்தலைவர் இராஜேந்திரர் திருவாய் மலர்ந்தருளியது).

பீகார் மகிலா சர்க்கா சமிதியின் புதிய கட்டிடத் திறப்பு விழாவில் இராஜேந்திர பிரசாத் பேசும்பொழுது, 'மக்களுக்குச் சர்க்காவில் வரவர நம்பிக்கை குறைந்து வருவது வருந்தத் தக்கது. சர்க்காவின் அதாவது கைராட்டையின் மகிமையை மக்கள் உணரும் காலம் வெகு சமீபத்திலேயே உள்ளது. **அற்பமான கருவிகளைக் கொண்டு பெரிய காரியங்களைச் சாதிப்பது இந்தியாவின் புராதனப் பண்பாடு",** என்று குறிப்பிட்டார்.

அமெரிக்கா, ஆக்க வேலைகள் செய்யவும் தேவைப்படுமானால் அழிவு வேலையை மேற்கொள்ளவும் அணுசக்தி ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது.

மலைகளுக்கு மத்தியில் வாழ்கின்ற மக்களோடு இணைப்பு ஏற்படுத்திக்கொண்டு வாணிபத்தை வளர்த்துக்கொள்ள, சீனா, கரடுமுரடான பிரதேசத்தில் பிரம்மாண்டமான சாலையமைக்கும் பெரும்பணியை வெற்றிகரமாக முடித்திருக்கிறது.

இந்தச் செய்திகள் வெளிவந்துள்ள நேரத்தில் தான், இந்தியத் துணைக்கண்டத்தின் முதல் குடிமகன் (First Citizen) பேசியிருக்கிறார், கைராட்டையிடம் மக்கள் பக்தி விசுவாசத்தோடு நடந்துகொள்ள வேண்டுமென்று.

பொறுப்புள்ளவர்கள், பொருளாதாரத்தைப் புரிந்து கொண்டவர்கள் பேசுகின்ற பேச்சா இது? ட்ரூமன்' என்று சொன்னவுடன் நமக்கு அணுகுண்டு அணுசக்தி—இவைதானே நினைவுக்கு வருகிறது? மா-சே-துங்- இந்தப் பெயரைக்கேட்டவுடன் சீரழிந்த சியாங்—கே—ஷேக் சீனாவிலிருந்து, சீர்பெற்றுள்ள செஞ்சீனாவரையுள்ள நிகழ்ச்சிகள் நம் கண்முன் படமாக ஓடித்தானே நிற்கின்றன? ஆனால், இராஜேந்திரர் பெயரைக் கேட்டவுடன் இராட்டினமா நம் கண் முன் காட்சியளிக்க வேண்டும்? வேதனை, வேதனை!

சீனாவிலுள்ள இந்தியத் தூதுவர் சர்தார் பணிக்கர் நவம்பர் 21௳ யன்று பாரிஸ் நகரில் பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில் மா—சே—துங் ஆட்சி, சீனாவில் செய்து காட்டியுள்ள பெரிய பொருளாதார முன்னேற்றத்தைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். அவர் கூறுகிறார். "பசியும் ஏழ்மையும் சீன மக்களைவிட்டுப் பறந்த வெகுநாட்களாகின்றன. சியாங் ஆட்சியின் போது சீனாவில் பொருளாதாரக் குழப்பம்

தலைவிரித்தாடியது. உற்பத்தியாளன் அவன் உற்பத்தி செய்கின்ற பொருட்களை சரியான விலைக்கு விற்று ஊதியம் பெற முடியாமல் இருந்தது. மக்களுக்குத் தேவையான பொருள் ஒன்றும் கிடைக்கவில்லை. ஆனால் இப்பொழுதோ—மா — சே—துங்கின் கம்யூனிஸ்ட் ஆட்சியில்-மக்களுக்குத் தேவையான எல்லாப் பொருட்களும் சுலபமாகவும், மலிவாகவும் கிடைக்கின்றன. கம்யூனிஸ்ட் ஆட்சி வருவதற்கு முன் ஏழை அதிகமான வரி செலுத்திக் கொண்டிருந்தான். இப்பொழுது பணக்காரன் அதிகமான வரி செலுத்துகிறான்."

அண்டை நாடு சீனா இரண்டு ஆண்டுகளில் அடைந்துள்ள இந்தப் பெரிய மாற்றத்தையும் இந்தியத் துணைக்கண்டம் நான்கு ஆண்டு காங்கிரஸ் ஆட்சியில் பெற்றுள்ள ஏமாற்றத்தையும் பார்க்கின்ற மக்களின் மனது குமுறாமல் என்ன செய்யும்? சீனாவைவிட செழிப்பிலும் மக்கள் பலத்திலும் உயர்ந்துள்ள இந்த நாடு மட்டும் ஏன் அலங்கோல நிலையில் அவதிப்பட வேண்டும்? நம்மோடு சுதந்திரம் பெற்று, மூன்று ஆண்டுகள் கூட நிலைத்து வாழமுடியாது என்று காங்கிரஸ் 'அரசியல் மேதை'களால் ஜாதகம் கணித்துக் கூறப்பட்ட பாகிஸ்தான் கூட உலகத்திலேயே மிகப்பெரிய மிதக்கும் பாலம் (Floating Bridge) ஒன்றைக் கட்டி முடித்துவிட்டதே! நாம் மட்டும் ஏன் கறுப்பு மார்க்கெட்டைத் தவிர வேறெதிலும் முன்னேறாமல் இருக்கிறோம்? காரணம், தேடிக்காண வேண்டியதொன்றல்ல. மா—சே—துங், அவர் கவனத்தைச் சாலைகள் அமைப்பதிலும், சர்க்கார் நிர்வாகத்தைச் செம்மையாக நடத்துவதிலும், பொருளாதாரப் புனரமைப்பு வேலைகளிலும் செலுத்துகிறார். ஆனால், இராசேந்திரரோ, ஆலயத் திருப்பணியில் ஈடுபடுவதிலும், கோசம்ரட்சண மாநாடுகளைத் திறந்துவைப்பதிலும், சர்க்காரின் மகிமையை மக்களுக்கு விளக்குவதிலும் நேரத்தைச் செலவிடுகிறார். ஆகவேதான் சீனாவில் அப்படி, இங்கே இப்படி!

இராஜேந்திரர் இராட்டினத்தின் சிறப்பைப் பற்றிப் பேசியதோடு நிற்கவில்லை; இன்னொன்றும் கூறியிருக்கிறார். "சிறிய அற்பமான காரியங்களிலிருந்து பெரிய காரியங்களைச் சாதிப்பது இந்தியாவின் புராதனப் பண்பாடு, என்கிறார். 'ஒரு பொருளின் பிரிக்கமுடியாத மிக நுண்ணிய பகுதியே அணு' என்று அணுக்கு இலக்கணம் வகுத்துக் கூறிய போதினன் டால்டன் (Dolton) கூற்றைப் பொய்யாக்கி, அணுவைச் சிதைத்து அணுசக்தியை வெளிப்படுத்தி அமெரிக்கா ரஷ்யா போன்ற நாடுகள் பலன் அடைந்து கொண்டிருக்கின்றன. சிறிய அற்பமான பொருள் அணு. அதிலிருந்து மிகப்பெரிய காரியங்களை மேல்நாட்டினர் சாதிக்கின்றனர். அவர்கள் கூட அதைப்பற்றி அதிகமாகப் பெருமைப்படவில்லை. ஆனால், இராட்டினத்தைச் சுழலவிட்டு, அது இசைக்கும் பாட்டிலே மனதைப் பறிகொடுத்து, 'இராட்டினமே கதர் பூட்டினமே' என்று நம்மைத் தெம்மாங்கு பாடச் சொல்லுகிறார் இராஜேந்திரர். அற்பமான இராட்டினம் சாதித்துள்ள பெரிய காரியங்களை எண்ணிப் பெருமிதம் வேறு கொள்ளுகிறார். கொள்ளச் சொல்லுகிறார்.

அற்பப்பொருள் அணு—அதன் மகத்தான சக்தி அணு சக்தி; இது பிற நாடுகளில்.

அற்பப்பொருள் இராட்டினம்—அதன் "அரிய" விளைவு கதராடை; இது நம் நாட்டில்.

விஞ்ஞானம் ஒவ்வொரு நாளும் புதிய பொருள்களை உலகுக்குத் தந்தவண்ணம் இருக்கிறது. ஆனால், இங்கு, இருபதாம் நூற்றாண்டில் இருப்பதற்கு லாயக்கில்லாத இராட்டினத்தின் மகிமை அல்லும் பகலும் பேசப்படுகிறது.

நாம் வாழ்வோமா? வாழ முடியுமா? — இதுதான் மேற்கூறிய மூன்று செய்திகளும் நம்மைப் பார்த்துக் கேட்கும் கேள்வி.

பொது மக்களே, வரப்போகின்ற தேர்தலிலாவது பதில் கூறுங்கள்!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆகவேதான் காங்கிரஸ் புதிய முறைகளைக் கையாளுகிறது. தேர்தலிலே மோசடி செய்கிறது. எதிர்க்கட்சி அபேட்சகர்களை வாட்டி வதைக்கிறது.

முன்பு நடைபெற்ற தேர்தலிலே மஞ்சள் நிறப் பெட்டியைத் தனக்குரிய தேர்தல் பெட்டியாகத் தேர்ந்தெடுத்திருந்தது காங்கிரஸ்.

இப்போது நடைபெறவிருக்கும் தேர்தலில், நுகத்தடியில் பூட்டப்பட்ட இரண்டு மாடுகள் என்கிற சித்திரம் தீட்டப்பட்ட பெட்டியைத் தன் பெட்டியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறது.

மஞ்சள் பெட்டியின் மகத்துவத்தை (?) மக்கள் மன்றம் உணர்ந்துவிட்டது. மாட்டுப் பெட்டிக்கு ஓட்டுப் போட்டால் என்ன பலன் கிடைக்கும் என்பதையும் மக்கள் மன்றம் உணர்ந்திருக்கிறது; இதை மனதில் வைத்துக்கொண்டு, ஆளும் பீடத்திலிருப்போர் தேர்தலை நேர்மையான வழியில் நடத்த வேண்டும். பிறகு மக்கள் கூட்டம் தன் நிலையை நிர்ணயிக்கட்டும்.

தி. மு. க. மாநில மாநாடு

1951 டிஸம்பர் 13, 14, 15, 16-ம் நாட்களில்

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில்

★

தமிழகத்தின் தலைசிறந்த
பேச்சாளர்கள், கலைவாணர்கள், இசைவாணர்கள்
கலந்து கொள்ளுகின்றனர்.

K. R. ராமசாமி நடிக்கும்
ஜமீன் மாளிகை சந்திரோதயம்

சமூக சீர்திருத்த தெலுங்கு நாடகம்
குலமுலேனி பில்லா

திராவிடப் பெண்கள் முன்னேற்றக் கழகத்
தோழியர் நடிக்கும்
போராட்டம்

குணசித்ர நடிகர் G. சக்ரபாணி, மு. கருணாநிதி
நடிக்கும்
வாழமுடியாதவர்கள்

ஆகிய எழுச்சியூட்டும் நாடகங்களும்
பகுத்தறிவு ஓவியக் காட்சிகளும் உண்டு.

தமிழகமெங்குமிருந்து பல்லாயிரவர் கூடுகின்றனர்.

நான்கு நாட்களுக்கும் கட்டணம்	ரூ. 3
தனித்தனி ஒவ்வொரு நாளுக்கும்	ரூ. 1

அனைவரும் வருக
அறிவொளி கண்டு மகிழ்க

N. V. நடராசன் — வரவேற்புத் தலைவர்
காஞ்சி மணிமொழியார், கே. மனோகரன் — செயலாளர்கள்.

மு. கருணாநிதி விளம்பர செயலாளர்.

திகட்டும் செந்தமிழ்ச் சுவடிகள்!

இந்திய அரசியல் திட்டம்	2	0
தமிழன் தொடுத்த போர்	1	12
சரிந்த சாம்ராஜ்யம்	0	10
அறிஞர் அண்ணாதுரை	0	8
ஈரோட்டுப் பாதை	0	6
திரு. வி. க. மணிமடல்	1	12
அதிசய தியாகிகள்	0	12
காரல் மார்க்ஸ்	0	12
ஆலையூரார் உபதேசம் (அண்ணா)	0	12
இரத்த வெள்ளம்	0	8
மல்லிகா	0	8
வஞ்சகி	0	8
மனைவி மாற்றம்	0	8
எதிர்ப்பிலே வளர்ந்த இயக்கம்	0	8
கள்ளக்கோழி	0	8
இன்பத்தின் எல்லை	1	0
என் மகள் (சேரன்)	1	0
வியர்வை விருந்து	0	6
பேசும் புளுக்கள்	0	8
கலைக்கோயிலா விபசார விடுதியா	0	4
கோயில் பெருச்சாளிகள்	0	6
அகப்பட்டான் ஹரிஹரதாஸ்	0	4
பைத்தியக்காரி	0	6
குமாரி செல்வா	0	6
யாருக்கு உழைத்தவர்கள்	0	5
விஷக் கன்னிகை	0	6
வரலக்ஷிமியின் காதல்	0	5
காதலன்	0	4
யார் இந்த ம. பொ. சி.	0	4
குத்தூசி	0	4
சுவாமிகாள்	0	4
ஹரே ராமா	0	4
கடவுள் களஞ்சியம்	0	4
திருப்பதி மொட்டை	0	6
இலட்சியவாதி அழகிரிசாமி	0	5
டால்ஸ்டாய் கதைகள்	0	10
துரோகி கப்லான்	0	4
இந்தி பொது மொழியா	0	8
இன்பக் கடல் (பாரதிதாசன்)	1	0
கழைக்கூத்தியின் காதல் ,,	1	0
முல்லைக்காடு ,,	0	8
வகுப்புரிமைப் போராட்டம் (க. அன்பழகன்)	1	12
அழகு ராணி ,,	1	4
கைதி (ஏ. கே. வேலன்)	1	4

பகுத்தறிவுப் பாசறை
147, பவழக்காரத்தெரு சென்னை.

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printers 147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan, B. A. (Hons.)